# உயிரே வணக்கம்



## வானலையில்
## ஆறுமுகம் சோமசுந்தரம்

மோட்ச மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடலினுக் குயிரே போல
உயிர்க்குயிர் ஆனாய் போற்றி
உடலுயிர்க் கறிவு நல்கி
உடலினைக் கழித்தாய் போற்றி
உடலுயிர் எனப்பின் நீங்கா
ஒற்றுமைப் பொருளே போற்றி
உடனுறை உயிர்க்கும் எட்டா
ஒளிர்பெருஞ் சோதி போற்றி

எம்முள் நிறைந்து
தன் வாழ்வை நிறைத்த
**அமரர் ஆறுமுகம் சோமசுந்தரம்**
அவர்களின்
பதமலரில்
சமர்ப்பிக்கப்படுபவை
இந்த
**அஞ்சலிமலர்கள்......**

மனைவி
மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் ஆறுமுகம் சோமசுந்தரம்


உற்பதம் 20-02-1923 நற்பதம்: 07-11-2005

பிரியாது நும்நிழலிற் றிளைத்திருந்தே விருப்போடு நின்சேவைசெய்ய
ஒருபோது மிளைத்திலனாய் ஆவலோடு நானிருக்க என்னைவிட்டு
பிரியாது பிரிந்தீரோ பதைக்கின்றேன் நின்னருமை புகலப்போமோ
பரணாரு நும்தமக்கே பரமபதம் நல்கவென இறைஞ்சுவேனே

- மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எங்கள் அருமை அப்பா

நல்லொழுக்கம் நற்பழக்கம் நவில்கல்வி ஞானமெல்லாம்
எல்லையிலா தெமக்களித்து இவ்வுலகில் என்றென்றும்
நல்லவையில் முன்னிருப்ப நல்கினாய் நின்னருமைக்
கெல்லையென ஒன்றுளதோ! ஏங்குகின்றோம் எந்தையரே!

- பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரி மந்த்ரம்

ஓம் பூர் புவ ஸ்வா
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹீ
தியோ யோ ந ப்ரசோதயாத்

அமரர் ஆறுமுகம் சோமசுந்தரம் அவர்களின் கையெழுத்தில் திகழும் இந்த காயத்திரி மந்திரத்தை தினந்தோறும் அவர்பூஜையறையில் வைத்து வழிபட்டு வந்தார்

**GAYATHRI MANTHRA** (Recited Three Times)

**Om Bhur Bhuvah Suvah**
**Tath Savithur Varenyum**
**Bhargo Devasya Dheemahi**
**Dhiyo Yo Nah Prachodhayath**
**Om Shanthi Shanthi Shanthi**

*We Meditate on That Supreme Splendour of the Radiant Being Illuminating the Three Worlds - the Gross, the Subtle and the Causal, Who is the Indwelling Controller and Director of All Things. May He Stimulate Our Intellect Entirely in Order to Realize the Truth.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் அங்குச நிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்
எல்லை இல்லா ஆனந் தமளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக! விநாயகா! விரைகழல் சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

எத்தாய ரெத்தந்தை யெச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவா ரொருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமார்க்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுத்தருளும் பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்கிறார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம்அமர்ந்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண் நுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டிப்
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் உருக்கி என் ஆர் உயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்ச்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண் ஆர் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஒ என்றென்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவான் அஷ்டோத்ர சத நாமாவளி

1. ஓம் ஸ்ரீ பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபாய நம:
**பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவுக்கு வணக்கம்**
2. ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய ஸ்வரூபாய நம:
**சத்திய வடிவினனான ஸ்ரீ சாயிக்கு வணக்கம்**
3. ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய தர்ம பாராயணாய நம:
**சத்தியத்திலும் தர்மத்திலுமே ஈடுபட்டிருப்பவருக்கு வணக்கம்**
4. ஓம் ஸ்ரீ ஸாயி வரதாய நம:
**வரங்களைக் கொடுப்பவருக்கு வணக்கம்**
5. ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்புருஷாய நம:
**என்றும் நிலைபெற்ற ஆத்மாவுக்கு வணக்கம்**
6. ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய குணாத்மனே நம:
**சத்திய குண ஸ்வரூபத்திற்கு வணக்கம்**
**என்றும் மாறாத கல்யாண குணங்களின் வடிவத்திற்கு வணக்கம்**
7. ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது வர்த்தனாய நம:
**ஷாதுக்களைப் பெருக்குபவருக்கு வணக்கம்**
8. ஓம்ஸ்ரீ ஸாயி ஸாது ஜன போஷணாய நம:
**சாதுக்களை வளர்ப்பவருக்கு காப்பவருக்கு வணக்கம்**
9. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஞாய நம:
**எல்லாவற்றையும் அறிந்தவருக்கு (உணர்ந்தவருக்கு) வணக்கம்**
10. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஜன ப்ரியாய நம:
**எல்லாவிதமான மக்களாலும் விரும்பப்படுபவருக்கு வணக்கம்**
11. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ சக்தி மூர்த்தயே நம:
**எல்லாவித சக்திகளுடைய திருவுருவமாய் இருப்பவருக்கு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம்

12. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வேஸாய நம:
எல்லாவற்றுக்கும் தலைவராக இருப்பவருக்கு வணக்கம்

13. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஸங்க பரித்யாகினே நம:
எல்லாவிதப் பற்றுக்களையும் விட்டுவிட்டவருக்கு வணக்கம்

14. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வாந்தர் யாமினே நம:
எல்லாவற்றையும் உள்ளிருந்து இயக்குபவருக்கு வணக்கம்

15. ஓம்ஸ்ரீ ஸாயி மஹிமாத்மனே நம:
மகிமை (பெருமை) ஸ்வரூபிக்கு வணக்கம்

16. ஓம் ஸ்ரீ ஸாயி மகேஸ்வர ஸ்வரூபாய நம:
மகேஸ்வர வடிவினருக்கு (சிவஸ்வரூபிக்கு) வணக்கம்

17. ஓம் ஸ்ரீ ஸாயி பர்த்தி க்ராமோத் பவாய நம:
பர்த்தி கிராமத்தில் அவதரித்தவருக்கு (பிறந்தவருக்கு) வணக்கம்

18. ஓம் ஸ்ரீ ஸாயி பர்த்தி ஷேத்திர நிவாஸினே நம:
பர்த்தி ஷேத்திரத்தில் வசிப்பவருக்கு வணக்கம்

19. ஓம் ஸ்ரீ ஸாயி யஷ்காய ஷிர்டி வாசினே நம:
புகழுடம்பில் ஷ்ரடியில் வசிப்பவருக்க வணக்கம்

20. ஓம் ஸ்ரீ ஸாயி ஜோடி ஆதிபள்ளி ஸோமப்பாய நம:
ஜோடி ஆதிபள்ளி ஸோமப்பாவுக்கு (திருநாமங்களில் ஒன்று) வணக்கம்.

21. ஓம் ஸ்ரீ ஸாயி பாரத் வாஜ ரிஷி கோத்ராய நம:
பரத்வாஜ ரிஷி கோத்திரத்தைச் சேர்ந்தவருக்கு வணக்கம்

22. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த வத்ஸலாய நம:
பக்தவத்ஸலனுக்கு வணக்கம்

23. ஓம் ஸ்ரீ ஸாயி அபாந்தராத்மனே நம:
பிறவிக் கடலைக் கடந்த ஆத்மாவுக்கு வணக்கம்

24. ஓம் ஸ்ரீ ஸாயி அவதார மூர்த்தியே நம:
அவதார மூர்த்தியே வணக்கம்

25. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பய நிவாரினே நம:
எல்லாதவித அச்சங்களையும் போக்குபவருக்கு வணக்கம்

26. ஓம் ஸ்ரீ ஸாயி ஆபஸ் தம்ப ஸூத்ராய நம:
ஆபஸ்தம்பர் இயற்றிய சூத்திரங்களைப் பின்பற்றி நடக்கும் கூட்டத்தைதச் சேந்தவருக்கு வணக்கம் (ஆபஸ்தம்பர் - ஒரு ரிஷியின் பெயர்)

27. ஓம் ஸ்ரீ ஸாயி அபய ப்ரதாய நம:
அஞ்சாமையை அளிப்பவருக்கு (அருள்பவருக்கு) வணக்கம்

28. ஓம் ஸ்ரீ ஸாயி ரத்னாகர வம்சோத்பவாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரதனாகர வம்சத்தில் அவதரித்தவருக்கு வணக்கம்

29. ஓம் ஸ்ரீ ஸாயி ஷிர்டி ஸாயி அபேதசக்தி அவதாராய நம:
ஷ்ரடிஸாமி (யாகவந்த) வேறுபாடற்ற சக்தியின் அவதாரத்திற்கு வணக்கம்

30. ஓம் ஸ்ரீ ஸாயி சங்கராய நம:
சங்கரருக்கு வணக்கம்

31. ஓம் ஸ்ரீ ஸாயி ஷிர்டி ஸாயி மூர்த்தயே நம:
ஷரடிஸாயியின் உருவமுடையவருக்கு வணக்கம்

32. ஓம் ஸ்ரீ ஸாயி த்வாரகா மாயி வாஸினே நம:
துவாரகாமாமியில் வசிப்பவருக்கு வணக்கம்

33. ஓம் ஸ்ரீ ஸாயி சித்ராவத் தடபுட்டபர்த்தி விஹாரிணே நம:
சித்திராவதியின் கரையில் புட்டபர்த்தியில் விளையாடு பவருக்கு வணக்கம்

34. ஓம் ஸ்ரீ ஸாயி சக்தி ப்ரதாய நம:
ஆற்றலை அருள் பவருக்கு வணக்கம்.

35. ஓம் ஸ்ரீ ஸாயி சரணாகத த்ராணாய நம:
தன்னைச் சரணடைந்தவர்களைக் காப்பவருக்கு வணக்கம்

36. ஓம் ஸ்ரீ ஸாயி ஆனந்தாய நம:
ஆனந்தத்தை அருள்பவருக்கு வணக்கம்

37. ஓம் ஸ்ரீ ஸாயி ஆனந்த தாய நம:
ஆனந்தத்திற்கு வணக்கம்

38. ஓம் ஸ்ரீ ஸாயி ஆர்த்த த்ராண பராயணாய நம:
துன்பமுற்றோரைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டிருப்போருக்கு வணக்கம்.

39. ஓம் ஸ்ரீ ஸாயி அனாத நாதாய நம:
திக்கற்றோரைக் காப்பாற்றுபவருக்கு வணக்கம்

40. ஓம் ஸ்ரீ ஸாயி அஸகாய ஸஹாய நம:
உதவி அற்றோருக்கு உதவி செய்பவருக்கு வணக்கம்

41. ஓம் ஸ்ரீ ஸாயி லோக பாந்தவாய நம:
உலகத்தின் உறவினனுக்கு வணக்கம்

42. ஓம் ஸ்ரீ ஸாயி லோக ரக்ஷா பாராயணாய நம
உலகத்தின் பாதுகாப்பிலேயே வணக்கம்

43. ஓம் ஸ்ரீ ஸாயி லோக நாதாய நம:
உலகத்தின் தலைவருக்கு வுணக்கம்

44. ஓம் ஸ்ரீ ஸாயி தீனஜன போஷணாய நம:
உதவியற்ற ஜனங்களுக்கு உணவளிப்பவருக்கு வணக்கம்

45. ஓம் ஸ்ரீ ஸாயி மூர்த்தி த்ரய ஸ்வரூபாய நம:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மூர்த்தி வடிவினருக்கு வணக்கம்

46. ஓம் ஸ்ரீ ஸாயி முக்தி ப்ரதாய நம:
மோஷத்தை நல்குபவருக்கு வணக்கம்

47. ஓம் ஸ்ரீ ஸாயி கலுஷ விதூராய நம:
குறை ஒன்றுமில்லாதவருக்கு வணக்கம்

48. ஓம் ஸ்ரீ ஸாயி கருணாகராய நம:
கருணையின் இருப்பிடமானவருக்கு வணக்கம்

49. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ தாராய நம:
அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பவருக்கு வணக்கம்

50. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஹ்ருத் வாஸினே நம:
எல்லா இதயங்களில் வசிப்பவருக்கு வணக்கம்

51. ஓம் ஸ்ரீ ஸாயி புண்ய பல ப்ரதாய நம:
எல்லாப் புண்ணியங்களின் பலனையும் நல்குபவருக்கு வணக்கம்

52. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பாப க்ஷயகராய நம:
எல்லாப் பாவங்களின் அழிவைச் செய்பவருக்கு வணக்கம்

53. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ரோக நிவாரிணே நம:
எல்லா வியாதிகளையும் போக்குபவருக்கு வணக்கம்

54. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பாத ஹராய நம:
எல்லாத் தொந்தரவுகளையும் அழிப்பவருக்கு வணக்கம்

55. ஓம் ஸ்ரீ ஸாயி அனந்தநுத கர்த்ருணே நம:
எண்ணற்ற துதிகளை ஆக்கியவருக்கு அல்லது எண்ணற்ற துதிகளால் புகழப்படும் படைப்புக்கடவுளுக்கு வணக்கம்

56. ஓம் ஸ்ரீ ஸாயி ஆதி புருஷாய நம:
முதல் ஆத்மாவுக்கு வணக்கம்

57. ஓம் ஸ்ரீ ஸாயி ஆதி சக்தயே நம:
முதல் பராசக்திக்கு வணக்கம்

58. ஓம் ஸ்ரீ ஸாயி அபரூப சக்தினே நம:
கண்ணுக்குத் தெரியாத ஆற்றல் உடையவருக்கு வணக்கம்

59. ஓம் ஸ்ரீ ஸாயி அவ்யக்த ரூபிணே நம:
புலன்களுக்குப் புலப்படாத வடிவத்தையுடையவருக்கு வணக்கம்

60. ஓம் ஸ்ரீ ஸாயி காம க்ரோத த்வம்ஸினே நம:
ஆசைகளையும் கோபத்தையும் அழிப்பவருக்கு வணக்கம்

61. ஓம் ஸ்ரீ ஸாயி கனகாம்பர தாரிணே நம:
(பீதாதம்பரத்தை) பொன்னாடையை அணிபவருக்கு வணக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. ஓம் ஸ்ரீ ஸாயி அத்புத சர்யாய நம:
அற்புதமான நடவடிக்கைகளைச் செய்பவருக்கு வணக்கம்
63. ஓம் ஸ்ரீ ஸாயி ஆபத் பாந்தவாய நம:
ஆபத்திலுள்ளவருக்கு உறவினனாய் இருப்பவருக்கு வணக்கம்
64. ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேமாத்மனே நம:
பிரேமஸ்வரூபத்திற்கு வணக்கம்
65. ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேம மூர்த்தயே நம:
பிரேம மூர்த்திக்கு வணக்கம்
66. ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரதாய நம:
பிரேமையை அருள்பவருக்கு வணக்கம்
67. ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரியாய நம:
பிரியனுக்கு (விரும்பப்படுபவனுக்கு) வணக்கம்
68. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ப்ரியாய நம
பக்தர்களுக்கு பிரியனாய் இருப்பவருக்கு வணக்கம்.
69. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த மந்தாராய நம:
பக்தர்களுக்கு கற்பகத்தருவாய் இருப்பவருக்கு வணக்கம்
70. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ஜன ஹ்ருதய விஹாராய நம:
பக்த ஜனங்களின் உள்ளங்களில் விளையாடுபவருக்கு வணக்கம்
71. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ஜன ஹ்ருதயாலயாய நம:
பக்த ஜனங்களின் உள்ளங்களை ஆலயமாய் உடையவருக்குவணக்கம்
72. ஓம் ஸ்ரீ ஸாயி பக்த பராதீனாய நம:
பக்தர்களின் ஆட்சியில் உள்ளவருக்கு வணக்கம்
73. ஓம் ஸ்ரீ ஸாயி பக்தி ஞான ப்ரதீபாய நம:
பக்தி, ஞானம் எனப்படும் சிறந்த தீபமாய் இருப்பவருக்கு வணக்கம்
74. ஓம் ஸ்ரீ ஸாயி பக்தி ஞான ப்ரதாய நம:
பக்தி, ஞானங்களை அருள்பவருக்கு வணக்கம்
75. ஓம் ஸ்ரீ ஸாயி ஸுக்ஞான மார்க்க தர்சகாய நம:
நல்ல ஞானநெறியைக் காட்டுபவருக்கு வணக்கம்
76. ஓம் ஸ்ரீ ஸாயி ஞான ஸ்வரூபாய நம:
ஞானஸ்வரூபிக்கு வணக்கம்
77. ஓம் ஸ்ரீ ஸாயி கீதா போதகாய நம:
கீதையைப் போதிப்பவருக்கு வணக்கம்
78. ஓம் ஸ்ரீ ஸாயி ஞான ஸித்தி தாய நம:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத் தூய்மையை நல்குபவருக்கு வணக்கம்

79. ஓம் ஸ்ரீ ஸாயி ஸுந்தர ரூபாய நம:
அழகிய வடிவத்தை உடையவருக்கு வணக்கம்

80. ஓம் ஸ்ரீ ஸாயி புண்ய புருஷாய நம:
புண்ணிய ஆத்மாவுக்கு வணக்கம்

81. ஓம் ஸ்ரீ ஸாயி பல ப்ரதாய நம:
பலனைக் கொடுப்பவருக்கு வணக்கம்

82. ஓம் ஸ்ரீ ஸாயி புருஷோத்தமாய நம:
புருஷோத்தமனுக்கு வணக்கம்

83. ஓம் ஸ்ரீ ஸாயி புராண புருஷாய நம:
மிகவும் பழமையான ஆத்மாவுக்கு வணக்கம்

84. ஓம் ஸ்ரீ ஸாயி அதீதாய நம:
எல்லாவற்றையும் கடந்தவருக்கு வணக்கம்

85. ஓம் ஸ்ரீ ஸாயி காலாதீதாய நம:
காலத்தைக் கடந்து நிற்பவருக்கு வணக்கம்

86. ஓம் ஸ்ரீ ஸாயி ஸித்தி ரூபாய நம:
தூய்மை வடிவினருக்கு வெற்றி வடிவினருக்கு வணக்கம்

87. ஓம் ஸ்ரீ ஸாயி ஸித்த சங்கல்பாய நம:
தவறாத எண்ணமுடையவருக்கு (தவறாத சித்தமுடையவருக்கு) வணக்கம்

88. ஓம் ஸ்ரீ ஸாயி ஆரோக்ய ப்ரதாய நம:
ஆரோக்கியத்தை அருள்பவருக்கு வணக்கம்

89. ஓம் ஸ்ரீ ஸாயி அன்ன வஸ்திர தாய நம:
உணவையும் உடையையும் அருள்பவருக்கு வணக்கம்

90. ஓம் ஸ்ரீ ஸாயி ஸம்சார துக்க க்ஷயகராய நம:
உலக வாழ்வின் துன்பங்களின் அழிவைச் செய்பவருக்கு வணக்கம்

91. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வாபீஷ்ட ப்ரதாய நம:
எல்லா விருப்பங்களையும் அருள்பவருக்கு வணக்கம்

92. ஓம் ஸ்ரீ ஸாயி கல்யாண குணாய நம:
கல்யாண குணங்களை உடையவக்கு வணக்கம்

93. ஓம் ஸ்ரீ ஸாயி கர்ம த்வம்ஸினே நம:
விதியின் பயனை அழிப்பவருக்கு வணக்கம்

94. ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது மானஸ சோபிதாய நம:
சாதுக்களின் உள்ளங்களை நன்கு சோபிதம் செய்பவருக்கு வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ மத ஸம்மதாய நம:
**எல்லா மதங்களையும் ஒப்புக் கொள்பவருக்கு அல்லது எல்லா மதங்களாலும் ஒப்புக் கொள்ளப்படுபவருக்கு வணக்கம்**

96. ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது மானஸ பரிசோதகாய நம:
**சாதுக்களின் உள்ளங்களை நன்கு தூய்மை செய்பவருக்கு வணக்கம்**

97. ஓம் ஸ்ரீ ஸாயி ஸாதகானுக்ரஹ வட வ்ருக்ஷ ப்ரதிஷ்டாபகாய நம:
**சாதகர்களுக்கு அனுக்கிரகம் செய்வதன் பொருட்டு ஆலமரத்தை நட்டவருக்கு வணக்கம்**

98. ஓம் ஸ்ரீ ஸாயி ஸகல ஸம்சய ஹராய நம:
**எல்லாச் சந்தேகங்களையும் போக்குபவருக்கு வணக்கம்**

99. ஓம் ஸ்ரீ ஸாயி ஸகல தத்வ போதகாய நம
**எல்லா உண்மைகளையும் போதிப்பவருக்கு வணக்கம்**

100. ஓம் ஸ்ரீ ஸாயி யோகீஸ்வராய நம:
**யோகிகளின் தலைவருக்கு வணக்கம்**

101. ஓம் ஸ்ரீ ஸாயி யோகீந்த்ர வந்திதாய நம:
**யோகிகளின் தலைவர்களால் வணங்கப்படுபவருக்கு வணக்கம்**

102. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ மங்கள கராய நம:
**சர்வ மங்களங்களையும் செய்பவருக்கு வணக்கம்**

103. ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஸித்தி ப்ரதாய நம:
**சகல வெற்றிகளையும் சாதனைகளையும் நல்குபவருக்கு வணக்கம்**

104. ஓம் ஸ்ரீ ஸாயி ஆபந் நிவாரிணே நம:
**ஆபத்துகளைப் போக்குபவருக்கு வணக்கம்**

105. ஓம் ஸ்ரீ ஸாயி ஆர்த்தி ஹராய நம:
**துன்பங்களை அழிப்பவருக்கு வணக்கம்**

106. ஓம் ஸ்ரீ ஸாயி சாந்த மூர்த்தயே நம:
**சாந்த மூர்த்திக்கு வணக்கம்**

107. ஓம் ஸ்ரீ ஸாயி ஸுலப ப்ரசன்னாய நம:
**மிக எளிதில் சந்தோஷமடைபவருக்கு வணக்கம்**

108. ஓம் ஸ்ரீ ஸாயி பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபாய நம:
**பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவுக்கு வணக்கம்**
**மங்களம்! மங்களம்!! மங்களம்!!!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி உயிர் போவது எப்படி என்று காண்போம்

மனிதன் இறக்கும்போது முதலில் பிராணவாயு வெளியேறு கிறது அதைத் தொடர்ந்து மற்ற வாயுக்கள் வெளியேறுகின் றன. எஞ்சி இருப்பது தனஞ்சயன் என்ற வாயு. அதாவது நொடிக்கு 224 மின் அதிர்வு வலைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த மின் அலைகளைக் கிர கித்து எடுப்பதற்கு இதர ஒன்பது வாயுக்களும் இல்லாததால் உடம்பின் சதைத் தொகுதி நேரடியாகக் கிரகித்து வீங்கிக் கொண்டே போக இறுதியில் தனஞ்சயன் என்ற வாயு அரசனும் வெளியேறும். பிராணாயமம் செய்து வந்தால் கூடிய காலம் வாழலாம் என்பதை இந்து மதம் மட்டுமல்ல கிறீஸ்தவ, இஸ்லாம் மதங்களும் சொல்கின்றன.

"தன்னுடைய ஆவியை அடக்காத மனுஷன் மதில் இடிந்த பாழான பட்டணம் போல் இருக்கிறான்"
நீதி மொழிகள் 25 : 28

பகுத்தறிவு, ஆறாவது அறிவென்பது இறைவனை அறிகின்ற அறிவாகிய சூக்கும சரீரம்.

"பிறப்பு என்னும் பேதமை நீங்கச் சிறப்பு என்னும் செம்பொருள் காண்பதறிவு"

பரமாத்மாவோடு ஜீவாத்மா ஐக்கியமாகி முக்தி நிலை ஏற்படுகிறது என்பதற்கு என்ன சான்று.
"கடவுளும் நானும் ஒன்றானோம் - திருமந்திரம் 2958
நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் - யோவான் 10:30
தவம் செய்பவரின் நாவில் அமிர்தம் சிந்துமென்று கூறுவதை மற்ற மதங்கள் ஏற்றுக் கொள்ளுமா.
"நான் கொடுக்கின்ற தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகம் உண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீ காலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கு மென்றார்.
— யோவான் சுவிசேஷம் 4 : 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனே நீ உன் இறைவனிடம் செல்லும் வரையில்
கஷ்டத்துடன் முயற்சி செய்து கொண்டே இருக்கிறாய்.
பின்னர் அவனை நீ சந்திக்கிறாய் - குர்ஆன் 83:6

எவன் தன்னைப் பரிசுத்தப் படுத்திக் கொண்டானோ
அவன் நிச்சயமாக சித்தியடைந்து விட்டான்

— குர்ஆன் 91:9

ஷரீஅத் தொழுகை: இடது பக்க மார்பிலே உள்ள இதயத்தில் மனத்தை நிறுத்தி ஓதுகின்ற இறை வசனத்தின் மேல் நினைவாய், இறைவனைத் தியானம் செய்து சாவதற்கு முன்பே சாவதைப் போல் தன்னை மறந்து லயித்திருத்தல் ஷரீஅத் எனப்படும்.

இரும்பு தரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து கரும்பு தரு
சுவை எனக்கு நல்கினையே. திருவாசகம்

அடுத்து மனிதன் தெரிந்தோ தெரியாமலோ செய்து விட்ட பாவங்களைப் போக்க முடியுமா.

சகல பாவங்களிலும் பெரும் பாவம் செய்தவனாக
இருந்தாலும் ஞானம் என்ற ஓடத்தினால் பாவ
சமுத்திரத்தை நீ கடந்து விடுவாய்

பகவத் கீதை 4:36

கந்தர்மடம் மணல்தறை ஆறுமுகம் சோமசுந்தரம்

**இறக்கும் காலம் பற்றிய இக் கட்டுரை அவரது இறந்த காலத்தில் எழுதப்பட்டது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மலர் சிதம்பரப்பிள்ளை

# வரலாற்றில் வாழ்க்கை

## திதி நிர்ணயம்

ஆண்டது இரண்டாயிரத் தோடைந்து
அரிய கார்த்திகைத் திங்கள்
பூண்ட தோர் திங்கள் ஏழில்
பூர்த்தி யாம் கந்த சஷ்டி
சப்தமி சூரன் போரில்
தன்னலம் கருதாச் செம்மல் - சோம
சுந்தரம் பதம் அடைந்தார் - சோம
சுந்தரர் பாதம் தன்னில்

---

அலை கடல் உடுத்த
அவனியின் மீது
எழில் மிகு நாடாம்
ஈழம் தன்னில்
சுந்தரக் கிராமம்
சுது மலை என்பது
வந்தனைக் குரிய
வைர முத்துவின்
வாரிசாய் வந்தார்
ஆறுமுகம் அவர்
ஆயுள் வேத
மருத்துவர் அன்றி
அம்மன் கோவில் - தர்ம
கர்த்தாவும் ஆவர்

கட்டுடை தன்னில்
கட்டழகுடனே
கன்னி சிவகாமி
உத்தமி அழகி
உயர் ஆசிரியை
செல்வி வேலாயுதத்தைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ஆக்கிட
திருமணம் அன்று - பெருந்
திருவிழா ஆனது.

இருவரும் இணைந்த
இல்லறப் பயனாய்
முத்தாய் உதித்தனர்
மூன்று குழந்தைகள்

அளவான குடும்பத்தின்
நடு நாயகமாய்
அவதரித்தவரே - சோம
சுந்தரம் என்னும்
சுந்தரக் குழந்தை

மூத்தவர் அக்கா
நகுலேஸ்வரி
இளையவர் தம்பி
விஸ்வ நாதன்

செல்வக் குழந்தை
சோமசுந்தரம்
கற்பன கற்றுக்
கற்ற வாங் கொழுகினார்
தமிழில் இவருக்குத்
தணியாத தாகம்
இலக்கியம் தன்னில்
இனியதோர் மோகம்
அட்சர கேத்திரம்
அத்து படிதான்

பேச்சு நாடகம்
விளையாட்டு என்ற
போட்டிகள் தனிலே
புகுந்து விளையாடி
தங்கப் பதக்கங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிக் கொண்டார்
எழுத்துப் போட்டியில்
எடுத்தவர் பரிசென
இன்றும் சான்று
இவர் எழுத்தே பகருது

பத்திரண்டகவையில் - தங்கப்
பதக்கம் பெற்றார் - பேச்சில் - சுவாமி
விபுலானந்த அடிகளார் - தம்மிடம்

அறிவுடையோரிடம்
அன்புடன் பழகி
ஆசி ஆலோசனை
அமோகமாய்ப் பெற்றார்

தங்கத்தாத்தா - புலவர்
சோம சுந்தரத்திடம் - தனி
மதிப்பினைப் பெற்ற
மாண்பினை உடையவர்
சோமசுந்தரம் எனின் - சொல்லவும் வேண்டுமோ

படிப்பினை முடித்தவர்
பயணம் மேற் கொண்டு
வவுனியா சென்றார்
மாற்றம் வாழ்வில்.
மாற்றம் தானே
ஏற்றம் அளிப்பது
முதன் முதல் வேலை
முன் வந்து நிற்க
விமானப் படைப்பிரிவில் கட்டிட
உதவி மேலாளர் ஆனார்.

ஒரு வருடத்தின் பின்
ஒட்டி சுட்டானில்
எழுது வினைஞராய்
இணைந்து கொண்டவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்படியாகப்
பதவியில் உயர்ந்து
மறுபடி பல இடம்
மாற்றலும் ஏற்பட
வாலிபப் பருவம்
வாழ்த்துக் கூறிட

இன்னார்க்கு இன்னார் என
எழுதியவன் வைத்தபடி
கந்தர் மடந்தனில்
கதராடை புனையும்
கண்ணியம் மிக்க கனவான்
மயில் வாகனம் - நேசம்மா
மகிழ்வுடன் மலர்ந்த
சுபத்திராதேவி தூய பெண்மணியைப்
பெற்றோர் தேர்ந்து எடுத்துத்
திருமணம் நடாத்தினர்

சுபத்திரா தேவி
சுந்தர வனிதை
பெண் என்ற சொல்லுக்கே
பெருமை அளிப்பவர்
அன்பும் பண்பும்
அடக்கமும் அறிவும்
தன்னகம் கொண்ட
சாந்த சொரூபி

அகத்தினில் மனைவி
சிறப்புடன் இருப்பின்
புறத்தினில் கணவன்
புகழுடன் திகழ்வான் - என்ற
சொல்லுக்கு இலக்கணம்
சுந்தரர் சுபத்திரா

இல்லறத் தேரை
இனிதே செலுத்திட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறப் பயனும்
நர்த்தனம் செய்திட
பெற்றனர் ஐந்து
நித்திலங்கள் தனை
தவத்தளவே ஆகும்
தான் பெற்ற செல்வங்கள்
மனத்தின் மகிழ்ச்சியில்
மலர்ந்தே மாமணிகள்
தயா நிதி - தேவகி
வாசுகி மங்கல
மங்கையர் பெண்களாய்
நடன சபேசன் கருணாகரன் என
புத்திரர் இருவர்
சத்தாய் உதித்தனர்

கல்வி யொடு கண்ணியம்
கடமை கட்டுப்பாடு - என்ற
நல்லியல்புகள் நலமுடன் ஊட்டி
பெறுமவற்றுள் பெரும்பேறு
அறிவறிந்த மக்கட் பேறு - அப்
பேற்றினைப் பெற்ற பெருந்தகையாளர்
அவரவர்க் கேற்ப ஐவரைத் தேடி
ஈஸ்வரன் - விஜயகுமார்
ஜெயேந்திரன் தன்னுடன்
ரேணுகா - பாமதி
தேர்ந்து எடுத்து
மணவினை முடித்து
மலர்ச்சியாய் வாழ்ந்திட

வாழ்க்கையின் நிறைவின்
வாழ்க்கையின் நிறைவில்
மன மது திழைக்க
வருகை தந்தனர்
மனம் நிறைவடைய
சிவானி - பிரசன்னா - பிரணவன்,
தர்சன் - ராகவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியங்கா - அஜித்தா
மீனாட்சி - வருணன்,
ராம் - ஹரி
பிரியங் கொண்ட
பேரப் பிள்ளைகள்.
ஆண்டு தொண்ணூறில்
அடைந்தவர் கனடா
வேலையும் பார்த்து - பின்னர்
ஓய்வாயிருக்கையில்

தொண்ணூற்றைந்தில்
தொட்டது மனத்தை
இளைய பாரதியின்
இனிய வானொலி
மென்மையின் நட்பு
மெய்சிலிர்த்திடவே
கலைஞரின் குரலோ
கவர்ந்து இழுக்க
லயித்தது மன்றி - அதில் தனை
இணைத்தும் கொண்டார்

முதியோர் அரங்கில்
முதல் நாளே பங்கேற்க
அனைவர் கவனமும்
அவர் மேற் பாய
நேயர் நெஞ்சங்களில்
இலகுவில் புகுந்து

நெருக்கம் ஆகி
நிலை பெற்றுவிட்ட
மறக்க முடியாப்
பெரும்னிதர் இந்தச்
சோம சுந்தரர்

வருத்தப் படுக்கையில்
மருத்துவ மனையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியம் நடந்திட
வானலை தனிலே
வளமான குரலில்
விமர்சகர் விருப்பம் - தந்த
இந்த மன வலிமை
இவருக்கு அன்றி
எவருக்கு உண்டு!

## மனிதருள் மாணிக்கம்

ஆறடி உயரம்
அமைதிப் பேச்சு
பளிங்கு உள்ளம்
பனி வெள்ளை உடை
ஆய்ந்த அறிவு
அற்புத விளக்கம் - எவரையும்
காயப்படுத்தாத
கருணை நெஞ்சம்
குரல் கம்பீரம்
குணம் பசுந் தங்கம்
மனித நேயம்
மாண்புடன் பேணி
அன்பால் அணைத்து
பண்பால் பிணைத்து
அனைத்திதயங்களில்
அரசாட்சி செய்த
மனிதருள் மாணிக்கம்
மாமேதை சோம
சுந்தரர் இன்று
எம்மிட மில்லை!

கார்த்திகைத் திங்கள்
ஏழாம் நாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமசுந்தரரின் - சோமவாரத்தில் - இந்தச்
சோம சுந்தரம் - இறைவன்
திருவடி அடைந்தார் அவர்
ஆத்ம சாந்திக்கு
அவனருள் வேண்டுறோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## மனைவி மனத்துயர்

அன்பினால் என்னை ஆண்ட
அற்புதத் தெய்வம் நீயே!
துன்பத்தால் இன்று நானும்
துடிப்பது அறிந்திடாயோ!

என்னுயிருக் குயிராய் ஈங்கு
இருந்து நீ மறைந்த துன்பம்
மின்னவால்த் தாக்கி நெஞ்சை
சன்ன மாய்த் துளைக்குதையா!

நினைக்கின்ற போது உள்ளம்
நெக்கு நெக்குருதையா - உமை
நினைத்துமே வாழ்வதன்றி - வேறு
செயற்பட ஏதும் உண்டோ!

ஆத்ம சாந்திக்கு இறை
அருள் யாசிக்கிறேன்
சாந்தி! ஓம் சாந்தி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் பிரிவாற்றாமை

அன்பினால் எமை அணைத்து
அறிவுரை பலவும் கூறி
துன்பமே வந்த போதும்
சோர்வின்றித் துணிந்து வாழ
வழியது காட்டி வாழ்வின்
விளைவுகள் எடுத்துக்கூறி
நலமுடன் நாமும் வாழ
இதமுடன் வளர்த்த தந்தை

அந்தத் தந்தையை எமக்குத்தந்த
தலைவனுக்கு நன்றி கூறி
எந்தையே உமை நினைந்து
எம்மது வாழ்வு தன்னை - நீ
காட்டிய வழியே வாழ்வோம்
எம் கடமையே அது தான் அப்பா!
ஓம் சாந்தி.

## மருமக்கள் கண்ணீர்

மாமனாய் உங்களை நாம்
மனத்திலே கொண்டதில்லை
பாசமுள்ள தந்தை யராய்ப்
பார்த்து மகிழ்ந்திருந்தோம்
நேசமுள்ள நீங்கள் இன்று
நெடும் பயணம் சென்றதனால் - மனம்
வேதனையில் வெதும்பிடினும் உமை
வாழும் வரை நாம் மறவோம்.

## பேரப் பிள்ளைகள் பிரலாபம்

ஆடியோடி விளையாடி
அணையும் போது அணைத் தெம்மை
கோடி இன்பம் தனைநாட
கொட்டும் முத்தம் பல ஈந்து
பாடி ஆட மிக மகிழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து ரசித்த எம் பாட்டா - இன்று - நாம்
வாடி விம்ம விழி மூடி
வந்து சேரா வழி சென்றீர்
ஓடி ஒரு முறை வந்தெமக்கு
ஒரே யொரு முத்தம் தாராயோ!

## சுற்றத்தார் சோகம்

நேர்மையின் நெஞ்சம்
நீதியின் குன்றம்
கூர் மதித் செல்வம்
குன்றாத கொள்கை
உள்ளத்தில் வாய்மை
உதட்டிலே புன்னகை
நினைத்ததை முடிக்கும்
நெஞ்சுரம் கொண்டு
அனைத்தவர் மனத்தையும்
அன்பினால் ஈர்த்த
சோமசுந்தரம் - தூயவர் தம்மை
நெஞ்சினில் இருத்தி - ஆத்ம
சாந்தியை அளிக்க இறையை வேண்டிநிற்கின்றோம்
ஓம் சாந்தி

## தேற்றம்

ஆண்டுகள் கோடிதானும்
அழுதுமே புரண்ட போதும்
மாண்டவர் மீண்ட தில்லை
மண்ணினில் நியதி அன்றோ!

ஆண்டவன் எழுத்தை மாற்ற
அவனியில் ஏதும் இல்லை,
பாங்குடன் இதை உணர்ந்து
பணியினைப் புரிந்து வாழ்வோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆருயிர்த் தம்பி ஆறுமுகம் விசுவநாதன்
பாசமுள்ள மகன் வி. மகேசன்
நேசமுள்ள மருமகள் ம. மஞ்சுளாதேவி

# எங்கள் குலவிளக்கு

எங்களைவிட்டுப்பிரிந்த பாசமுள்ள அண்ணர் திரு ஆறுமுகம் சோமசுந்தரர் அவர்களைப் பற்றி எனது உள்ளக்குமுறலில் இருந்து சில வார்த்தைகள்:

புன்னகை பூத்த முகத்துடன் காணப்படும் பார்வை கம்பீரமான தோற்றம், வீறுநடை, நேரந்தவறாமை, கடமை உணர்ச்சி, தெய்வீகத் தன்மை, பிறருக்கு அரிய கருத்துக்களை பரிமாறல், உறவினர்கள், நண்பர்களுடன் அன்பாகப் பழகுதல் இப்படிப் பல குணாதிசயங்களைப் பெற்று உதித்தவர் எனது அண்ணை. இவர் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்காது, தனது சொந்த முயற்சியில் ஆங்கிலம் கற்று, சரளமாக ஆங்கிலம் பேசக் கூடியவராகவும் எழுத்துத் திறமை வாய்ந்தவராகவும் திகழ்ந்தார். அவர் தனது வாழ்க்கையில் "முயற்சி" என்ற கொள்கையைக் கடைப்பிடித்து, சுந்தர சீலராக விளங்கினார். இவரின் சொல் திறமை, எழுத்து வன்மை, மட்டுமன்றி, இவரின் ஆங்கில தமிழ் எழுத்துக்கள் உறுதியானதாக வட்டவடிவில் அச்சுப் போல் இருக்கும்.

இவர் சில மாதங்களுக்கு முன்னர் நோய்வாய்ப் பட்டிருந்ததாகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் மூலம் அறிந்து வேதனைப்பட்டேன். சற்று நலிவுற்றேன். ஆனால் அடிக்கடி அவரின் சுகநலன்களை தொலைபேசி மூலம் விசாரித்தபோது சற்று தென்பு ஏற்பட்டது. அவரின் பிரிவிற்கு ஒரு வாரதிற்கு முன்னர் அண்ணையுடன் கதைத்தேன். தனது சுகவீனம் பற்றிக் காட்டாது "உனக்கு என்ன தேவை என்று தான் அடிக்கடி கேட்பது வழக்கம். வீதியில் துவிச்சக்கரவண்டியில் போவது கவனம். உடல் நலத்தைக் கவனித்து நல்ல சத்துள்ள உணவுகளை உட்கொள்ளுமாறு புத்திமதி கூறுவார். அவர் என்னை தம்பி என்று மட்டும் கருத வில்லை. சிறுபிள்ளையாகக் கருதினார். என்னை தெய்வீகத்தன்மை வாய்ந்தவனாக வாழ்க்கையில் நல்நெறிப்படுத்த வேண்டும் எனக்கருதி சைவநெறி சார்பான ஒளிநாடாக்களை அனுப்பி வைத்தார். "முளையாகி மரமாகி கட்டுடையில் நின்ற மரம் ஒன்று" காயாகி கனியாகி கந்தர்மடத்தில் நின்ற மரம் ஒன்று. புலம் பெயர்ந்து கனடாவில் "ஆன்மீகம்" பற்றி சொரிந்த மரம் ஒன்று.

அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் எனது பாசமுள்ள அண்ணி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை வெளிப்படுத்துவதோடு, நாங்களும் அத்துயரில் பங்கு கொள்கிறோம் என்பதனை தெரிவிக்கிறோம்.

அத்துடன் அன்னாரது, ஈமக்கிரியைகளில் கலந்து அனுதாபச் செய்திகள் அனுப்பி இன்னும் பல உதவிகள் புரிந்த புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்கின்ற எமது கட்டுடையூர் உற்றார், உறவினர்கள் அனைவருக்கும எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை மைத்துனர்
டாக்டர் ம. கிருஷ்ணதாஸன்

# என்னுடைய அத்தான் சோமசுந்தரம்!

82 வயதாயிருந்தாலும் நெடுக ஒரு விளையாட்டுக் குணம், பகிடிக்கு குறைவில்லை.

நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலம் வயது 14, அப்போதுதான் அக்காவை "கமலா சேக்கஸ்" க்கு கூட்டிப்போக வீட்டுக்கு வந்தார். அனுமதி கிடைக்கவில்லை. "தம்பி வாறீரோ" என்று என்னிடம் கேட்டார். அன்று தொடக்கம் அத்தானுடன் என் சகவாசம் தொடங்கியது.

ஓமந்தையில் காட்டுக் கந்தோரில் வேலை செய்யும்போது அம்மாவுடன் விடுதலைக்கு நானும் போயிருந்தேன். "கொம்மாவும் சுபத்திராவும் அங்காலை சமைக்கினம். கொஞ்சம் விறண்டி குடிக்கப்போறீரோ" என்று கேட்டார். "அதற்கென்ன அத்தான்" என்றேன். ஆளுக்கு அரை கிளாஸ் குடித்துவிட்டு நல்ல மீன் குழம்பு சாப்பாடு.

நான் Medical College இல் படிக்கும்போது அடிக்கடி அவரது அலுவலகத்திற்குப் போவேன். Short Leave அடித்துப்போட்டு எங்காலும் சாப்பிடப் போவோம். அக்காலத்தில் மனக்கிலேசம் இல்லாமல் ஓர் ஆருயிர் நண்பன் போல் பழகினார். இப்படி ஏராளமான இனிய அனுபவங்கள்.

ஒருத்தருக்கும் கொடுமை நினைக்காத மனம். சின்னப்பிள்ளை மாதிரி ஒரு விளையாட்டுக் குணம். எல்லோருடனும் அன்பாகவும் தாட்சண்யமாகவும் பழகும் மனது.

விதியின் போக்கு. இப்போது அவர் அமரராகிவிட்டார். என் மனதில் பதிந்த அனுபவங்கள் என்றும் மறையாது. முருகன் துணை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு மனைவி
சுபத்திரா

# என் அன்புத் தெய்வம்

நாங்கள் இருவரும் இவ்வளவு சீக்கிரம் பிரிந்து விடுவோம் என்று நான் எள்ளளவும் எண்ணியிருக்கவில்லை. உங்கள் ஆறுதல் கதைகள் அன்பான பேச்சு அனைத்துமே என் மனதை வட்டமிட்டுக் கொண்டேயிருக்கின்றன. நான் உங்களுக்கு ஆறுதல் சொல்ல நீங்கள் எனக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டு எத்தனை நாட்கள் பிறந்த நாட்டுக் கதைகளை மணிக்கணக்கா திரும்பத் திரும்பக் கதைத்துக் கொண்டிருந்தோம். புலம்பெயர்ந்து இன்னொரு நாட்டில் இருக்கின்றோம் என்ற உணர்வு சிறிதளவும் இல்லாது யாழ்ப்பாணத்தில் எப்படியிருந்தோமோ அதே வாழ்க்கை நடைமுறையையே கடைப்பிடித்து வந்தோம். அடிக்கடி எமக்குக் கிடைத்த வாழ்க்கைக்கு நீங்கள் ஆண்டவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டேயிருப்பீர்கள். நான் உங்களுடன் கதைத்ததும் நீங்கள் என்னுடன் கதைத்ததும் சரியாய்ப் போச்சு.

பிள்கைளோடு பிள்ளையாக நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கதைத்துக் கொண்டாடிய நாட்கள் தான் எத்தனை? ஆண்டவன் தந்த வாழ்க்கையை எப்படி வாழ வேண்டுமென நீங்கள் காட்டிய பாதையை நாங்களும் தொடருவோம். உங்களை தன்பால் சேர்த்திட்ட எம்பிரானை வேண்டுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமுள்ள மூத்தமகள்
தயாநிதி ஈஸ்வரன்

# என் தந்தை எனக்கொரு தெய்வம்

அப்பா நீங்கள் எங்களை சிறுவயதில் இருந்து வளர்த்ததை எண்ணிப் பார்க்கவா? நீங்கள் எங்களை மகளிர் கல்லூரியில் படிக்கச் சேர்த்து பாடசாலைக்கு போகும்போது எங்களுக்கு அதற்கான தேவைகளை செய்து அந்த வயதிலும் எங்களை பெருமையாக போக வைத்ததை எண்ணிப் பார்க்கவா?

அல்லது எங்களை சைக்கிளில் ஏற்றி கட்டுடைக்கு அப்பம்மா வீட்டிற்கு கூட்டிச்சென்ற அந்த நாட்களை எண்ணிப் பார்க்கவா? அல்லது நல்லூர் திருவிழாவுக்கு கூட்டிச்சென்று அங்கு நாங்கள் கேட்ட பொருள்களை வாங்கித் தந்த நாட்களை எண்ணிப் பார்க்கவா?

அப்பா நாங்கள் எல்லோரும் ஒன்றாக இருந்து அம்மாவின் கையால் சோறு குழைத்து, போட்டியாக சோறு சாப்பிட்ட நாளை எண்ணிப்பார்க்கவா? பின் நாங்கள் வளர்ந்ததும் எங்களுக்கு பக்கதுணையாக இருந்து நான் வெளிநாடு செல்வதற்கு பட்ட கஷ்டத்தை எண்ணிப் பார்க்கவா?

என் கணவன் இறந்தபோதும் என்ன செயயலாம் என்று நான் நின் கதியன்றி நின்ற வேளையில் என் கண்ணீரைத் துடைத்து ஒவ்வொரு நாளும் என்னிடம் வந்து கீதாச்சாரத்தைப் பற்றி சொல்லி எல்லோருக்கும் மரணம் என்பது முந்தி பிந்தி இருக்கிறது என்று சொல்லி இனி நீ தைரியமாக வாழ வேண்டும் என்று என்னை சமாதானப்படுத்தியதை எண்ணிப் பார்க்கவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா நான் உங்களிடம் வந்துபோகும்போது எனது கார்மட்டும் கூட்டிவந்து நின்று என்னை அனுப்பி வைத்துவிட்டு நான் வீடு போய் சேர்ந்தனா என்று தொலைபேசி மூலம் கூப்பிட்டுப் பார்ப்பதை எண்ணிப் பாாக்கவா? நீங்கள் நோயுற்று வைத்தியசாலையில் இருந்தபோதும் உங்கள் நோயைப் பற்றி சிந்திக்காமல் எனக்கு புத்திமதி கூறியதை நினைத்துப்பாாக்கவா? அப்பா நீங்கள் நாங்கள் வளர்ந்தும் எங்களை கடைசிவரையும் கோழி குஞ்சுகளை தன் இறகுக்குள் வைத்து வளர்ப்பது போல் வைத்து வளர்த்தீர்கள். வைத்தியசாலையில் இருந்தபோதும் C.T.B.C வானொலிப் பெட்டியை தலைமாட்டில் வைத்தபடி தனது விடாமுயற்சியால் தனது தமிழ் ஆற்றலை இறுதிவரை C.T.B.C. வானொலி மூலமாக வெளிப்படுத்தினார். அதேவேளையில் எங்களையும் வானொலி கேட்கும்படி கூறுவார்.

நீங்கள் வைத்தியசாலையில் இருந்து வீடு வந்து படுக்கையில் இருந்தபடி ஒரு பொருள்தன்னும் வீணாகக்கூடாது என்று நீங்கள் அதை பயன்படுத்தியதை எண்ணிப்பார்க்கவா? அப்பா நீங்கள் எப்போதும் கூறுவதுபோல் நாங்கள் ஐவரும் எங்கள் உயிர் உள்ளவரை எல்லோரும் ஆச்சரியம்படும்படி இறுதிவரை ஒற்றுமையாக இருப்போம். அப்பா உங்களைப் பற்றி எழுத நினைத்தால் ஒரு புத்தகமே காணாது. நீங்கள் எங்களுக்கு இவ்வளவும் செய்தும் உங்கள் உயிர் பிரியும்போது நாங்கள் பக்கத்தில் நின்றும்கூட எங்களால் உங்களை காப்பாற்ற முடியவில்லையே?

இவ்வளவு காலமும் நடமாடும் தெய்வமாக இருந்து எங்களைக் காத்தீர்கள். இனியும் எங்களுடன்கூட இருந்து எங்களை வழிநடத்துவீர்கள் என்ற உறுதியுடன் இருக்கிறோம். உ ங்கள் ஆத்மாசாந்தி அடையும்படி ஆண்டவனிடம் தினம் அழுது போற்றிப்பாடி உங்கள் அடி இறங்குகிறோம்.

ஓம் சாந்தி. ஓம்சாந்தி. ஓம்சாந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமுடன் மகள்
தேவா விஜயகுமார்

## என்றும் என் அன்பு அப்பாவிற்கு!

ஆறாது ஆறாது அழுதாலும் தீராது அனுபவத்தில்
அறிந்திட்டோம்
ஆற்றுவது நீங்கள் அப்பா
ஆனால் ஆண்டவன் அழைத்துவிட்டானே

பாசவலைக்குள் பக்குவமாய் எங்களை அரவணைத்து
வளர்த்தீர்
எங்கள் குடும்பம் போல் எங்குமே இல்லையென்றிருந்த
எங்களை ஏங்கவிட்டுப் போனதேனோ?

பிள்ளைகள் பெருமை கேட்டு பெற்றோர்
அகமகிழ்வார் ஆனால் இன்று உங்கள் பெருமையை
உலகம் பேசும்போது.... எங்கள் மகிழ்ச்சியில்
பங்கேற்க நீங்கள் இல்லையே அப்பா,
ஏன்? காணும் என்று இறைவன் நினைத்தானா?

அம்பாள் மந்திரம் முழங்க அமைதியாக
துயில் கொண்ட அன்பு அப்பாவே
அவள்தன் பாதத்தில் அணைத்திட்டாள்
என்ற ஆறுதலுடன் அமைதியானோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமுள்ள மகன்
நடனம்

# அப்பா! அப்பா! அப்பா!

உங்களின் மகனாகப் பிறந்ததிற்கு என் முதற்கண் வணக்கம் பிள்ளையாருக்கே.

அங்கு அன்று கட்டுடை அரசடிப்பிள்ளையார் கோவிலில் நீங்கள் எடுத்துரைத்த அறிவுரைகள் இன்றும் என் காதில் ஒலித்தபடியே இருக்கின்றது. கந்தர்மடத்திலிருந்து கட்டுடைக்கு செய்த பல துவிச்சக்கரவண்டிப் பிரயாணங்களின்போது நீங்கள் உணர்த்திய சமயவழிபாடு, வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடித்து வருவதால் என் வாழ்வு வளம்பெற்றுள்ளது.

கட்டுடைப் பிரயாணங்களின்போது நீங்கள் நாடியால் முட்டி "நடனம்" என்னும்போது "என்ன அப்பா" என்று நான் சொல்வது நேற்றுப்போல் ஞாபகத்தில் வருகின்றது. பலமுறை மருதடிப் பிள்ளையார் வாசலில் கடலை உண்டது இன்னும் வாயில் சுவைத்துக் கொண்டிருக்கின்றது.

அன்று இலங்கையிலிருந்து நான் வெளிநாட்டுப்பிரயாணம் மேற்கொண்டபோது நல்லாசி வழங்கி என்மீது வைத்த அளப்பரிய நம்பிக்கை என்னை ஒரு சீரிய பண்புள்ள மனிதனாக வாழ வழிவகுத்தது. நான் அமெரிக்கா வந்தபின் சோம்பேறித்தனமாக வீட்டுக்கு எழுதாவிட்டாலும் நீங்கள் ஒழுங்காக எனக்குக் கடிதம் எழுதுவதால் சிறிதளவேனும் உங்கள் ஒழுங்கு முறைகளை நானும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் மனதில் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

அன்பும் அறனும் பண்பும் நிறைந்த உங்கள் இல்வாழ்க்கை எனக்கு ஒரு சிறந்த ஒரு முன்மாதிரியாக அமைந்தது. நாமும் இம்மாதிரியான வாழ்க்கையை நடாத்த வேண்டும் என்று சதா எம் சிந்தனையில் வேண்டிக்கொள்வோம்.

நீங்கள் கனடா வந்தபின் பரந்த உங்கள் தமிழ் அறிவை எங்களுக்கு மட்டுமன்றி கனேடியத் தமிழ் மக்களுக்கும் பயன்தரும் வகையில் வானொலியில் குரல் எழுப்பி சேவை செய்தது எங்களுக்கு பெருமையையும் மகிழ்ச்சியுமாகும்

பாசமுள்ள மகனாக, அண்ணனாக, கணவனாக, தந்தையாக, மாமனாக, பெரியப்பாவாக. பேரனாக கரும வீரனாக கண்ணியவாளனாக வாழ்ந்து எம் வாழ்க்கையில் ஒளி விளக்காக திகழும் உங்களுக்கு எம் அழியாத அன்புகலந்த நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமுள்ள உங்கள் மகன்
கருணா

## அன்பான என் அப்பா!

சொல்ல எவ்வளவோ இருக்கின்றது' சொல்லிழந்து நிற்கின்றேன். கிடைத்த வருமானத்துடன் எங்களை பக்குவமாய் வளர்த்ததை சொல்லவா? இல்லை பிறர் சொல்லு எங்களை தைக்காமல் பராமரித்ததைச் சொல்லவா?

வேலைநிமித்தம் நீங்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் எங்களையும் அழைத்துச் செல்வீர்கள். அப்பொழுது உங்களுடன் அநுராதபுர வீதியிலும், கொழும்பிலும் பகலில் உலாவிவிட்டு இரவில் உங்கள் அறைக்கு அழைத்து வந்து நீங்கள் சமைத்துத் தந்த சோறு கறியை எப்படியப்பா மறப்பேன்

பார் போற்றும் உத்தமராக நாங்கள் உயர வேண்டுமென்று பெற்றோர்கள் நீங்கள் பட்டபாடு எங்களைத் தவிர யார் அறிவார்?

நாடு விட்டு நாடு வந்தும், நாங்கள் இந்த நிலையில் இருப்பதற்கு நீங்கள் கனடிய குடிவரவு அதிகாரிகளுடன் தொலைபேசியில் எத்தனை தடவை கதைத்திருப்பீர்கள்? எத்தனை போரை கண்டிருப்பீர்கள்? இன்னும் எத்தனை எத்தனையோ...

ஒரு சிறு உறுத்தல் என்மனதில், நீங்கள் சிறு வயதில் எடுத்த போட்டிப்பரிசுப் புத்தகங்கள் கனடாவுக்கு எடுத்துவரப்பட வில்லையே

தாயகத்தில் அன்று நடந்த ஆறுமுகநாவலர் பெருவிழாவை நீங்களும் உங்கள் அலுவலக நண்பர்களும் முன்நின்று நடாத்தி வைத்த காட்சி இன்னும் பசுமரத்தாணிபோல் மனதில் தெரிகின்றது.

பெற்ற பொழுதிலும் பெரிதுவப்பர் பெற்றோர் தம் மகனைச் சான்றோர் எனக் கேட்கும் பொழுது' இங்கு ஒவ்வொரு நாளும் உங்களுக்கு மகனாக பிறக்க என்ன தவம் செய்தேனோ என்று நினைத்து பெருமிதமடைகின்றேன்.

எல்லாம் வல்ல இறைவன் என்றும் உங்களுடன் இருப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமுள்ள மகள்
கடைக்குட்டி வாசுகி ஜெயந்திரன்

# தைரியம் தந்த தந்தையே

"தாயிற்சிறந்த கோவிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"

ஏதாவது எழுதவேண்டுமென்றால் உங்களிடம் ஓடி வருவேன். இன்று உங்களைப்பற்றி எழுதுவதற்கு எங்கு நான் செல்வேன். உன்னால் எதுவும் செய்ய முடியும் என்று தைரியம் தந்த தந்தையே. இன்று உங்கள் தைரியத்தில் வாழ்க்கையைத் தொடர்கின்றேன். அவள் பெண்பிள்ளை என்றாலும் விளையாட்டுகளில் பங்குபற்றத்தான் வேண்டும், சைக்கிள் ஓடத்தான் வேண்டும், கார் ஓடத்தான் வேண்டும் என்று சிறுபருவத்திலிருந்தே உற்சாகமூட்டி வளர்த்த பெருமை உங்களுக்கு மட்டும்தான் சென்றடையும்.

நீங்கள் தந்த மனத்தைரியம் கொஞ்சம் தூர்ந்துவிட்டது. உங்களை இறைவனிடம் வழிஅனுப்பும்போது!

ஆனால் ஒரு உறுதிமொழி தருகிறேன் - உங்களிடம் கற்றவை ஒன்றும் என் இறுதிவரை அழியாது. அப்பா உங்கள் உடல் எங்களைப் பிரிந்தாலும் நீங்கள் - எங்களில் வாழ்ந்து கொண்டு வழிநடத்துகிறீர்கள்.

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமுள்ள மருமகன்
குமார்

## அன்பான அப்பா!

மகனா! இல்லை நண்பனா! என பார்ப்போர் வியக்க மருமக்களையே சொந்தப் பிள்ளைகள் போல் அரவணைத்து, அன்பு, பாசத்துடன் ஒரு நண்பனாக தந்தையாக பெற்றவர்கள் தாயகத்தில் என்ற நினைப்பின்றி உங்களுடன் நான் வாழ்ந்த ஒவ்வொரு நாட்களுமே விலைமதிக்க முடியாதவை.

நான் நீராடிவிட்டு இறைவழிபாட்டின் பின்னர் அவரருகில் சென்று பாவ வினையறுக்கும் எம் பெருமான் திருநீறும் திலகமுமிட்டு அம்பாள் மந்திர சுலோகங்களையும் பஞ்ச புராணங்களையும் பாடிக் கொண்டிருக்கும் பொழுது கண்கள் விழித்தபடி சிவ சிவ சிவ என்ற ஒலியுடன் இறுதி மூச்சு மேல் எழ பிறவா இறவா பெம்மான் பெருங்கடல் சேர்ந்தார்.

ஆண்டவன் அவசரப்பட்டு விட்டானா இல்லை அளவிற்கு மேல் ஆகாது என்று தன்னுடன் அழைத்துக் கொண்டானா? அப்பா! உங்கள் அறிவுரைகள், ஆக்கங்கள் அனைத்துமே நீங்கள் எங்களுக்கு விட்டுச் சென்ற அழியாச் சொத்துக்கள். ஆண்டவனுடன் கலந்துவிட்ட உங்களை இருகரம் கொண்டு வணங்குகின்றேன்.

இவரது ஆன்மா நித்தியானந்தப் பெருவாழ்வில் நிலை பெற ஈசனை - எங்கள் பிரானை - தேசனை - சிவலோக நாயகனை ஏத்தி ஏத்தி நினைவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Loving Grand Children
Shivanee, Prashana
& Branavan Eswaran

## The wick of Our Oil Lamp

We cannot think you're not alive somewhere.
We think of you just as we did before.
No sudden gust of wind has closed the door
Or made your presence vanish in thin air.
We write you this because we know you're there,
That even after death there must be more.

After we lost our Father,
We looked at you, not only as a Grandfather, but also as a Father,
Even though you're not our Father,
We knew that you'll be there,
With the little things you do
You let us know you cared.

You were always there to help,
Whatever the need maybe


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Now you're becoming the Grandfather
That we have never known
Where're drawn to your thoughts every day
For the kindness you have shown.

We just want to thank you
And let you know we care
A second father like figure as great as you
Is something very rare

Some things will always be in style
Good solid things like honesty,
Trust and caring about people.

It's qualities like these
That keeps us aware of whom we are
And what we can give to life.

It's qualities like these,
Grandfather, that you've taught us to value,
Through your influence, your example, and your love.

The many things you've done
All the times that you were there
Help us know deep down inside
How much you really care.
It has made us love you very much,
Even though we might not say,

We appreciate everything you've doing for us
And has made us very proud to have you as our Grandfather
Rest in peace to a man who was the wick of our oil lamp


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Loving Grandson
Tharshan Vijayakumar

## ADMIRE

When I was in Sri Lanka, you and grandmother visited us every 2 years. Despite the tense situation in that country, you risked many things to see us. This shows your ability to sacrifice for others. My mother always tells me stories of how you sacrificed a lot for your children. I hope I can have the ability you had to sacrifice for others because you did not want to hurt others' mind. You had many good qualities. You were always patient and tolerant of our faults and you also gave us many good life lessons to learn. Thank you for the many valuable lessons you taught us, which helped us to a great extent in this journey.

Loving Grandson
Raghavan Vijayakumar

## Love

Thaatha was very nice. Like for example, he always helps those in need of charity. He was very loved by all. Everyone knew him because he was very popular. Not just because of his looks, it was also because of his caring way of others and treating them in a civilized manner. That's why everyone knew him. He was also a very disciplined person. He knew what was right and sometimes if people were adamant of doing the wrong thing, he would correct them. He sacrificed many things to give nourishment to his family. For example, when my grandpa had to sell his own wedding ring to give food for his family. So you see, even-though you might not know thaatha, you can still detect the sacrificing quality in him when you talk to him. I bet he has only one wish; to see his beloved wife and children with his grandchildren grown up to be successful in anything they do. I bet thaatha will be smiling all the way through.

We will never forget you



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Loving Grand-Daughter
Priyanha Nadanasabesan

## Affectionate Grandpa

My grandfather, Arumuham Somasundaram Ayah was one of the greatest people I had known. He always showed love and affection never hate nor rejection. Hate never touched his soul. He always made everyone feel special. When I was born twelve years ago he was with us in Boston. He was also with us on my first birthday. I will always remember the times he asked me to sing for him. He was one of the strongest men I've ever known. Even when he was very ill he came to Boston for especially for me in July of 2005. I've never seen sorow or sadness on his face and in his eyes. I had remember the astonishment that I felt when I saw this 80 year old man swimming. That was a few years back. It's very hard to believe that he had ever disliked anyone or even yelled once in his life. Appapapa was one of the greatest people I knew. I was very fortunate to have seen him often and to have spent time wtih him. We will all miss him dearly, but we al lknow he is with god and will be watching us.

Loving Grand Daughter
Ajetha Nadanasabesan

## Grandfather

My grandfather was full of grace and love any bad things that came near his heart would rebel away. I am so proud of my grandfather. My grandfather was full of life and peace. He had a god in him. He taught me how to swim I'll always remember that. To me my grandfather was the best man in the world that's a fact! He lived till 82 years old. Now he is one wtih god. But he will always be with me no matter what. I loved my grandfather.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Loving Grand Daughter
Meena

## APPAPAH

I know we haven't bonded very much,
over the years,
like we did when we did when I was a kid,
but there still was a connection.
You were a rold model to me.
I saw you as a strong man who never gave up,
and I tried to be the same kind of person
But after that Monday,
when I found out what happened
I 'm sorry to say to say,
the confident, strong person I tried to be,
didn't show in me no more.
My soul collapsed
I was confused,
I never thoguht I would cry,
but I realize that's what happens when your hero falls.
At that time I thought aobut how love only brings pain,
but now I know that it's better to love
even though it may bring regret and sorrow,
thento not love at all.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Loving Grandson
Varun

## Great Soul

I know a man with grace, intelligence and purity,
His name is Somasundram Arumugam, he is my grandfather.
This man had a great soul and lots of loved ones and people loved him back.
I thought I'd never see the day,
He'd pass away.
This is a moment of my life where sadness took over,
Inside I felt depressed.
My grandfather taught me a lot about life and its ways,
Also what is coming for me in future
He made me feel special because,
Of the things he did, this proves he was thoughtful and kind,
Sometimes he even makes smiles appear on people's faces,
When they are down and lonely.
But we have fo face life,
And no matter how sad it could be,
We should keep going even though it hurts.
That was one of the lessons my grandfather taught me.
One day I will join him in heaven.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Loving Twin Grandsons
Ram (Joshua )
Harry (Kevin)

## Thatha! Thatha! Thatha!

Thatha was a very kind and a sweet man who loved us so much. He was a man who always played and brought joy to us. Thatha was the best grandfather in all times. He was not only a grandfather but also a good friend to us.

Thaatha we will never forget the way you hang your key chain in you pocket and we steal from you. How can we forget the 'hide and seek' game Thatha. We looked forward for the 'Kaivizasam' (money) from you every year. All your memories will ast with us forever.

**அன்பு மருமகன்**
தேவசுந்தரம் சோமசுந்தரம்

## மனித நற்பண்புகளின் செம்மல்

மாமா நீங்கள் சாயியின் மனித நண்பன்.

ஈழமண்ணில் எனது அத்தை சுபத்திராதேவியை கரம் பிடிப்பதற்காகவே பிறந்து எமக்கெல்லாம் பெருமை தேடித்தந்தீர்கள். தூய அன்பின் இருப்பிடம். உங்கள் உறவுகள் எங்கிருந்தாலும் அவர்கள் மீது அன்பையும் பண்பையும் பொழிந்தீர்கள். உண்மையின் நாயகன் நீங்கள். சமாதானத்தின் நீங்கள் வழிகாட்டி எமக்கு. அகிம்சாவழி என்றால் என்ன என்பதை எமக்கு எடுத்துக் காட்டினீர்கள் வான் அலை ஊடாக...

உங்கள் ஆத்மா உடலைப் பிரிந்திருக்கலாம். நீங்கள் எமக்காக விட்டுச் சென்ற அந்த ஐந்து நற்பண்புகளும் எம்மிடமே உள்ளது. நீங்கள் காட்டி வழியில் நடந்து உங்களுக்குப் பெருமை சேர்ப்போம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன்
சுரேஷ்வரன்

# நெஞ்சில் நிறைந்தவை....

கட்டுடையில் மலர்ந்து கந்தர்மடத்தில் மணமேடையேறி
அன்று கனடாவில் கால்பதித்து - இன்று
எங்களையெல்லாம் துக்கத்தில் நிறுத்தி விட்டு - நீர்
மட்டும் நீண்ட தூக்கத்தில் அமர்ந்து விட்டீரோ

மாமா, மாமா என்ற வார்த்தை இன்று மாயமாகிவிட்டதே
அன்று ஒன்றாக கூழ்குடித்த நாட்கள்
சேர்ந்து 304 விளையாடிய பொழுதுகள்
நாமிருவரும் Baseball World Scrics பார்த்த நேரங்கள்
ஒன்றாக உணவருந்திய வேளைகள்
சைக்கிள் ஓடிய பின்னேரங்கள்
Snow தள்ளிய காலங்கள்
இவையெல்லாம் நீங்கள் எம் நெஞ்சில் எழுதிய சில பதிப்புகள்
அவை என்றும் எம்முள்ளே நிஜமாகிறது

ஆஜானுபாகுவாகிய தோற்றமும்
அன்பார்ந்த, உரிமையான வார்த்தைகளும்
வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போன்ற புத்திமதிகளும்
தொலைநோக்கு பார்வை கொண்ட அறிவுரைகளும்
சூரியனுக்குற்ற ஒளி கொண்ட கண்களும்
எங்கள் எல்லோரிற்கும் வழிகாட்டிய மனிதநேயமும்
இவையெல்லாம் நீர் எம் நெஞ்சில் எழுதிய சில பதிப்புகள்
அவை என்றும் எம்முள்ளே நிஜமாகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புடன்**
**சுதர்சன், பிரியா**

## என்றும் எம்மில்

கடல் கடந்து வந்தாலும் - எம்மை
எமக்கு உணர்வித்தவரே
கண் இமைக்கும் கணப்பொழுதில்
மறைந்து போனீரே

உணர்வின் உறவுகளாய்
முதியோர் அரங்கம் தவிக்க
உம்மை இழந்த உறவுகளாய் நாம்
இது கனவோ?

தொடக்கமென்றால் இருக்கும் முடிவு - இருந்தும்
ஐயா தாங்க முடியவில்லையே
உமது எண்ணங்களும் நினைவுகளும் - என்றும்
எம்மில் இழையோடியிருக்கும்.

**அன்புடன்**
**குலம், சுசி, சிந்துஜா**

## ஒளியாக

எம்மில் சுடர் ஒளியாய்
CTBC வானொலியில் அறிவொளியாய்
சுபத்திரா அம்மையாருக்கு அன்பொலியாய்
கனடாவாழ் தமிழ் மக்களுக்கு பண்பெனும் நல்ஒளியாய்
வாழ்ந்த ஆறுமுகம் சோமசுந்தரம் ஐயாவின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

**ஸாயி நாமத்துடன்**
**மகாலிங்கம் குடும்பம்**

# சோமசுந்தர சுரங்கள்

பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் நாங்கள் எமது ஸ்காபரோ இல்லத்தில் சிறிய சாயிகோவிலமைத்து குடும்பமாகப் பஜனைகள் பிரார்த்தனைகள் செய்து கொண்டிருக்க, அயலவர்களும் நண்பர்களும் பங்கு பற்றினார்கள். 30,40,50 என்று பக்தர்கள் கூட்டம் சேர ஒவ்வொரு ஞாயிறு தோறும் பஜனைகளோடு ஆன்மீக சத்சங்கமும் நடைபெற்றன. ஒரு நாள் உயரமான ஆஜானுபாகுவான உருவமும், நெஞ்சில் உரமும், நேர்மையும் கற்றறிந்த ஆழமும் பளிச்சென மின்னித் துவளும் கண்களும் கொண்ட புன்னகை தவளும் முகத்துடன் ஒருவர் தன் பொறுமையே உருவான மனையாளுடன் வந்து கலந்து கொண்டார். பஜனையிலும் ஆன்மீக சத்சங்கத்திலும்அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டி மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குபற்றினார். அவர்தான் பின்னர் எனது பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் பாத்திரமாகிய திரு ஆறுமுகம் சோமசுந்தரம் ஐயா ஆவார். அப்போது அவர்கள் எமது வீட்டிற்கு மிக அருகாமையிலேயே வசித்து வந்ததால் தவறாது ஞாயிறு தோறும் சந்தித்து ஆன்மீகத் தேடலில் ஈடுபடும் மிக அரிய வாய்ப்புக்கிடைத்தது. அவர் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் போதனைகளில் மிக ஆழமான நம்பிக்கையும் அவரது அவதார மேன்மையை உணர்ந்தவராகவும் இருந்தார். அத்துடன் என்மீது அன்பும் மதிப்பும் வைத்து ஒரு அபூர்வ உறவோடு பழகிவந்தார்.

தீமையைக் கண்டால் சீறவும் உண்மையை உறைக்கக்கூறி மனதில் பதியும்படி செய்யவும் அவருக்கு நிகர் அவரேதான். பக்தி ரசம் சற்றும் குறையாமல் அன்பு சொட்ட ஆதரவான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளால் எமது சத்சங்கம் உயிரோட்டமாக நடைபெற அவர் பெரிதும் பங்காற்றினார்.இச்சத்சங்கங்களால் பெற்ற பட்டறிவினாலும் அவரது ஆன்ம ஞானத்தாலும் தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும் என்பதற்கிணங்க பலரையும் ஆன்மீகப்பாதையில் வழிநடத்தி சத்தியசாயியின் பக்தர்களாகவும் ஆக்கினார். இவ்வாறு சில ஆண்டுகள் நடைபெற்றிருக்க, அவர் தமது இருப்பிடத்தை தமது பிள்ளைகளோடு தூர இடத்திற்கு மாற்றிக் கொண்டதாலும் போக்குவரத்து வசதியீனம், முதுமை காரணமாகவும் ஒவ்வொரு வாரமும் வரமுடியாவிட்டாலும் எம்மோடு தொடர்பைத் தொடர்ந்து பேணிவந்தார். பகவானின் விசேட தினங்களிலெல்லாம் தம் துணைவியார் சகிதம் தவறாமல் வந்து பக்தியோடு பங்குபற்றிச் செல்வார். மாதம் தோறும் நடைபெறும் சத்யநாராயண பூசையிலும் பூரண பங்கேற்று அமைதி அடைந்தார். நாம் செய்கின்ற மக்கள் சேவைப் பணிகளில் மனமுவந்து தமது நிதிப்பங்களிப்புகளைச் செய்து வந்தார். கனடாவில் செய்யும் சேவை, புட்டபர்த்தி மூலம் செய்யும் சேவை எதையும் தவறவிடமாட்டார். குறிப்பாக நாம் தமிழீழத்தில் அல்லலுறும் மக்களுக்கும், விசேடமாக அனாதரவான சிறுவர்களைப் பராமரிக்கும் இல்லங்களுக்கும் வவுனியா சத்யசாயிசேவா சங்கமூடாகச் செய்யும் பணிக்கு மாதம்தோறும் தாராளமாக உதவுவார். கடைசியாக எமது இல்லத்திற்கு பாரியாருடன் வந்த அவர் தம்மால் இனி அடிக்கடி வரமுயாதென்றும் அதனால் தமது மாதாந்தப் பங்களிப்பை பலமாதங்களுக்கு ஒன்றாகத் தந்துவிடுவதாகக் கூறி ஒப்படைத்துவிட்டுச் சென்றார். இன்று அவர் இல்லா விட்டாலும் அவர் பெயரால் இன்னும் பலமாதங்களுக்கு அப்பணி தொடரும். மக்கள் சேவையை மகேசன் சேவையென்றே கருதினார்.

பக்தியில் மட்டுமன்றி அவர் ஒரு அறிவுப் பொக்கிசமாகத் திகழ்ந்தார். திருக்குறள் மற்றும் நீதிநெறிநூல்களை ஆழமாகக் கற்றிருந்தார். சமய நூல்களென்றும் தத்துவ நூல்களென்றும் எல்லாவற்றையும் படித்திருந்தது மட்டுமன்றி எடுத்த எடுப்பிலேயே அவற்றிலிருந்து குறிப்பாக மேற்கோள் காட்டி விள்க்கும்சொல்வன்மையும் சாதுரியமும்பெற்று விளங்கினார். தமிழ்மொழி, தமிழர், சமூக அமைப்புகள், குடும்ப வாழ்வு இவை பற்றியெல்லாம் தெளிவான எண்ணக்கருத்துகளைக் கொண்டிருந்தார். ஒரு சுதந்திர தாகம் கொண்டவரும்கூட.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதியையும் அடிமை வாழ்வையும் அஞ்சாநெஞ்சோடு எதிர்த்துக் குரல் கொடுப்பார். குழந்தைகள், இளையோர், குடும்பத்தவர், முதியோர் அரசியல் விரும்பிகள், மெஞ்ஞானத்தேடுனர் எல்லோருடனும் அவரவருக்கேற்ப உரையாடி அவரவர் ஈடேற பெரிதும் உதவிடும் உத்தமர். அவர் தமது கனடா வாழ்க்கையில் கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தூடாக கனடியத் தமிழருக்கு ஆற்றிய பணி மகத்தானது. தமிழர் மத்தியில் தனி முத்திரை பதித்தவர். பல்லாயிரக்கணக்கான நேயர்களின் உள்ளத்தில் ஆழமாக வேர் ஊன்றிவிட்டார். அவர் வாழும் போதே அவரது இல்லற வாழ்வு பெருமை பற்றி அவ்வப்போது மலர்கள் வெளியிடப்பட்டன. அவர்களின் 50வது இல்லறத்தின் பொன்மலரை வெகுசிறப்பாக CTBC வெளியிட்டது. அச்சந்தர்ப்பத்தில்கூட அவர் தன் ஆன்மீக உந்தலில் என் வீட்டிற்கு வந்து எந்த மலர் எப்படி வெளிவந்தாலும் அது பகவான் நாமத்தோடு பகவான் சிந்தனையில் தொடங்காவிட்டால் பயனற்றுப்போய்விடும். அக்குறைநீக்கும்பொருட்டு பகவான் பெயரால் ஒரு முகப்புக் கட்டுரை தருமாறு கேட்டுக்கொண்டார். எனது வேலைப்பழு, நேரமின்மையைக் காட்டியபோது நீங்கள் பாடும் ஒரு பஜனைப்பாடலாவது தாருங்கள் என்று வாங்கி "துணையாக வருவாய் ஐயா" என்ற தலைப்பில் அந்தப் பஜனைப் பாடலையே முதலாகப் போட்டு அம்மலரை வெளிவரச்செய்தார். அவ்வைபவம் வெளிமண்டபத்தில் நடந்தபோதும் என்னை பகவான் சிந்தனையோடு அதை ஆரம்பித்து வைக்கச்செய்தார். கடைசி நாட்களில் அவரக்கு ஒரு மரியாதை மகுடம் சூட்ட எண்ணிய நண்பர்கள், குடும்பத்தவர் ஒரு ஒலி நாடாவை வெளியிட விரும்பி அவரது விருப்பத்தைக் கேட்டனர். அவர் இருந்த அரைகுறை மயக்க நிலையிலும்கூட பகவான் கொடுத்த சக்தியாலன்றோ என்னை உடனே தொலைபேசியில் அழைத்து மிக உற்சாகமாகவே கதைத்து, அப்படி ஒரு ஒலி நாடாவை வெளியிடப்போகிறாகளாம். அதற்குப் பகவானின் உயிர்ப்புத்தான் முதல் மூச்சாக இருக்க வேண்டும். பகவான் பெயரால் அதற்கு ஒரு தலைப்புக்கொடுத்து தொடக்கிவிடுமாறு கேட்டுக்கொண்டார். நானும்மனம் கசிந்து அன்பருளோடு ஏற்றுக்கொண்டேன். ஆனால் இரண்டாவதுநாள் அவரை அந்தப் பகவானே அழைத்துக் கொண்டார். அவரது பக்தியினாலும் பகவானின் அவதார நம்பிக்கையினாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மஞானத்தாலும் அவர் மிகுந்த நம்பிக்கையுடனும் சந்தோசமாகவும் அமைதியாகவும் தனது முடிவை ஏற்றுக் கொண்டார்.

அவர் ஒரு புண்ணிய ஆன்மா என்றே கூற வேண்டும். ஏனென்றால் ஒரு மனிதன் தன் வாழ்வில் என்னென்ன எப்படியெப்படி அமைய வெண்டுமென்று விரும்புவானோ அப்டியான ஒரு வாழ்க்கையே அவருக்கு அமைந்திருந்தது. இளமையில் கற்ற கல்வியும், விளையாட்டும், சுற்றுலாக்களும் பின்னர் துறைசார்ந்த அரச தொழிலும் பூமிதேவி போன்ற பொறுமைமிக்க இல்லத்தரசியும், வையம் புகழும் பண்பான மக்களும் ஏற்றாற்போல் வந்தமைந்த மருமக்களும் அருஞ்செல்வங்களான பேரக்குழந்தைகளையும் செல்வச் செழிப்போடு முழுமையாக அனுபவித்தார். வாழ்நாளில் வைத்தியசாலையை நாடாத தேக ஆரோக்கியம், கண்காது, கால்கள் சகலனவும் இறுதிவரை அவருக்கு முழுமையாக வலிமையோடு செயலாற்றின. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அவரது மூளை இறுதிவரை இளமை குன்றாது பூரணமாய்ப் பிரகாசித்தது. தன் இறுதிநாட்களில் அதிகநாள் படுக்கையில் இராமலும்திடீரென சொல்லாமல் கொள்ளாமல் போகாமலும் நாளெண்ணி நாள் வைத்ததுபோல், வைத்திய சாலையிலன்றி தன்வீட்டிலே, காணவேண்டியோரெல்லாரையும் கண்டு பேசி செய்ய வேண்டியவற்றைச்செய்து முடித்து தான் நம்பிய அவதார புருஷர் பொருட்டான ஆனந்த பஜனை, பிரார்த்தனையை வீட்டிலேயே முழு அறிவோடு அனுபவித்து, அமைதியாகத் தன் பூதவுடலை நீக்கி புகழ்உடலில் பகவான் பாதங்களில் சரண் புகுந்தார். ஆருக்குத்தான் கிடைக்கும் இந்த நாவலர் ஆறுமுகம் சோமசுந்தரர் பெற்ற அரும்பெரும்அற்புத வாழ்வு. நெஞ்சில் நேர்மையும் இறைஉணர்வும் ஆன்மீக நாட்டமும் இறைநம்பிக்கையும் கொண்டு கர்மயோகியாய், இல்லற ஞானியாய் வாழ்ந்து வானுலகெய்திய அந்த அற்புத ஆன்மா பகவான் பொற்பாதக் கமலங்களில் பேரின்ப மோட்ச வாழவு பெறுமென்பதுறுதியே.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓம் ஸ்ரீ சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையபாரதி + நளாயினி

# வானலைக் கம்பீரம்

கொட்டும் மழையானாலும், சுட்டெரிக்கும் கொடும் வெய்யிலானாலும்
சூறைக்காற்று சூழ்ந்து தாக்கினாலும்
எதையும் சட்டைசெய்யாது தன்கடன் தவறாமல் ஒளிதருகின்றது
சாலை ஓரத்து மின் விளக்குகளைப் பாருங்கள்,
நெடுந் தூரமான எம் காற்றலைச் சாலைப் பயணத்தில்
அறிவொளி வீசிய மின்னொளி விளக்காக சோமசுந்தரம் ஐயா
அவர்களை நாம் கண்டோம்.

ஒரு கோபுரம் அழகென்றால்
அதற்கு பலகாரணங்கள் இருக்க வேண்டும்.
உயரம், உறுதி, கலைத்திறன், கண்கவர் வண்ண வேலைப்பாடுகள்,
இப்படித்தான் ஆறுமுக அழகிற்கும் பலகாரணங்களை எம்மால்
முன்வைக்க முடியும்.
யாரை யார் அளந்து சொல்வது, அவர்புகழை எடுத்து விரிப்பது
எப்படி
இங்கேதான் எமக்குள் மயக்கம்

வானலைக் கம்பீரத்தை வரிகளால் வரிவது எப்படி?
வார்த்தைகளுக்காக தவம் இருக்காத வார்த்தை திறம் சொல்வதா?
பரமனே ஆனாலும் நெற்றிக்குநேரே நேர்மையை எடுத்துரைக்கும்
கீரனின் பரம்பரை என்பதா?

முப்பாலில் முக்காலம் உணர்ந்துரைத்த வள்ளுவனோ
வார்த்தைகளில் வாழ்ந்தான்
குழந்தைக்கு குழந்தையாய், இளமைக்கு இளமையாய், முதுமைக்கு
முதுமையாய், கருத்துக்களோடு தன்னையும் உருமாற்றி
தமிழ் நெஞ்சங்களைப் பண்படுத்திய வார்த்தை உழவனல்லவா

அவர் அகத்தின் அழகை அறிவிக்கும் வெள்ளை ஆடை
தமிழ்ச் சுகத்தைச் சொல்லும் நிமிர்ந்த நடை
முதியோர் அரங்கத்தில் ஒரு இளைஞனாகவே உலா வந்தவர்
பௌர்ணமிக்குப்பின் நிலவு தேயும் வளரும் எப்படியோ மற்றொரு
பௌர்ணமி வந்து வானத்தின் சோகத்தை தீர்த்து வைக்கும்.
எங்கள் வானொலி தேசத்தின் தமிழ் நிலா இனி எப்போது
உலாவரும், நட்சத்திரக் கூட்டங்கள் தவிக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது வான்வெளியில் ஒரு நிரந்தர இடைவெளி
இந்த இடைவெளியை யாரால் நிரப்ப முடியும்
பெருங் காவிரியை அகத்தியனால் மட்டுமே சிறு கமண்டலத்தில் உள்ளடக்க முடிந்தது
அவனுக்குப்பின் இன்றுவரை இன்னொரு அகத்தியன் பிறக்கவும் இல்லை, காவிரி கமண்டலத்தில் அடங்கவும் இல்லை.
அப்படித்தன் இனியாராலும் அவர் விட்டுச்சென்ற இடத்தை நிரப்பமுடியாது.

வானலைக் குடும்பங்களின் மூத்த உறவாகி
ஆத்மார்த்தமாக ஒவ்வொரு உள்ளங்களுக்குள்ளும் உணர்வுகளோடு
உறவாடி, தன் வார்த்தைச் சுறுசுறுப்பால் வயதுச் சுறுசுறுப்பை மயக்கி
வானலையில் வாழும்வரை சாதனைபடைத்த சாதனையாளர்
இவரென்றே வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்க விளைந்தோம்.

கொட்டும் மழைத்துளிகளை எல்லாம் எண்ணிக்கை செய்வது கடினம்
அவர் பொழிந்த கருத்துமழைத் துளிகளை எண்ணிக்கையில் அடக்கி விடுவது என்பது சுலபமான காரியம் அல்ல.
எழுதலாம், எவ்வளவோ எழுதலாம், எழுதிக்கொண்டே இருக்கலாம், வானத்தை மையாக வார்க்க வேண்டும் அப்போதுதான் எழுதுகோல்மை வற்றிவிடாதிருக்கும்.
இந்த ஞாலத்தை காகித தாள்களாக மாற்ற வேண்டும். அப்போது தான் தாள்களுக்கு பஞ்சம் ஏற்படாதிருக்கும்.
ஐயா!...... போய்வாருங்கள்.
நீங்கள் மீண்டும் வரும்வரை.... உங்கள் கருத்துக்கள், உயர்ந்த சிநதனைகள், புதுமைகளை புலரவைத்த எண்ணங்கள், எல்லாம் கலையகக் கருவறையில் தினமும் புதிதாய் கருத்தரித்துக் கொண்டே இருக்கும்.
வட அமெரிக்க காற்றலை தமிழ் சுமக்கும் காலமெல்லாம்
உங்களையும் சேர்த்தே சுமந்திருக்கும்.
உங்கள் நாமம் உச்சரிக்கும் போதெல்லாம் தமிழ் தலைநிமிர்ந்து வாழ்த்துரைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. செல்வரத்தினம்

# அருள்நெறி வாழ்ந்தவர்

கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் பத்தாவது ஆண்டு விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட வேண்டும் என்று ஆலோசிக்கப்பட்ட பொழுது முதலில் மனதில் தோன்றியவர் பெரியவர் ஆறுமுகம் சோமசுந்தரம் ஐயா அவர்கள்.

கேட்போரை இன்புறுத்தும் இனிய பொருள் பொதிந்த நிதானமான சொல்லாட்சியும் அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் ஓர் உருப்பெற்று வந்தது போன்ற தோற்றப் பொலிவும் உடைய அமரர் ஆறுமுகம் சோமசுந்தரம் ஐயா அவர்கள் மறக்க முடியா மனிதருள் மாணிக்கம்.

தூய்மையான பக்தியும் அசையாத இறைநம்பிக்கையும் கொண்டு கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் கலைஞர்கள் நேயர்கள் வர்த்தகர்கள் அனைவரதும் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாகி வாழ்ந்தவர். அருள்நெறிப்பிரியர்.

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்தில் எல்லாம் உளன்

என்ற பொய்யா மொழிப்புலவன் வள்ளுவன் சொல்லுக்கு இலக்கிமாகி பொய்மையில்லாத வாழ்வு வாழ்ந்தவர். எவரும் உள்ளதையே சொல்லி உள்ளபடி வாழ்ந்தால் உலகத்தார் எல்லோராலும் எக்காலத்திலும் போற்றப்படுவர் என்னும் உண்மையை இவர் வாழ்வில் கண்டோம்.

எல்லோருக்கும் இனியராய் வாழ்ந்த இவர் ஆன்மா சாந்தி பெறுவதாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாராஜன்

# சங்கத்தமிழன்

நம்பவில்லை
எப்படி நம்புவது,
வானம் ஒடிவதும், காற்று களைத்து ஓய்வெடுப்பதும்,
சூரிய தேசம் இருள்வதும், .... இது நடக்கிற காரியமா?
நான் நம்பவில்லை
சாய்ந்தும் தாளாத பைசா கோபுரம்போல்
நோயுற்ற வேளையிலும் தன்நம்பிக்கை தாளாமல்
தமிழோடு விளையாடிய வாயிதழ்கள் வலுவிழக்குமா?
நான் நம்பவில்லை
அறிவு மணங்கமழும் ஆறுமுகத் தமிழை
மூச்சாக உள்வாங்கினேன், முத்தமிழாக உயிரோடு அணைத்தேன்
அவர் பேச்சு நின்றால் தமிழுக்கும் மூச்சல்லவா திணறி இருக்கும்
நான் நம்பவில்லை
தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை என்று
பாவேந்தன் சொன்னமொழி மெய்யென்றால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் தமிழர் மனங்களில் தமிழ் வளர்த்த தமிழ்த் திருத்தொண்டர் ஆறுமுகம் சோமசுந்தரம் மரணித்தார் என்றால் அது பொய் பச்சைப் பொய். நான் நம்பவில்லை.

இப்பொழுதும்கூட வானலைக் கதவுகளை திறக்கின்ற போதெல்லாம் வணக்கம் வானலையில் ஆறுமுகம் சோமசுந்தரம் என்று வழமைபோல் வானலையில் குரல்வரும் என்றே காத்துக்கிடக்கிறேன்.

ஏன் எதற்காக இந்த பெருமகனில் இத்தனை அன்பு
கரும்புக் காட்டை எறும்பு நேசிப்பதைப்போல்
நந்தவனத்தை நாடி தும்பிகள் துதி பாடுவதுபோல்
வெளுத்த மனம் படைத்த பழுத்த தமிழ் அறிஞன்அவருடைய
செந்நா ஒழுகும் பைந்தமிழ்ப் பைங்கூழ் உண்டு வளர்ந்த பாசம்
என் உள்ளத்தோட்டத்தில் உயிர்ப் பூவாய் அவர் மலர்ந்தார்.

கார்த்திகைத் திங்கள் 6ம் நாள்
இழப்பென்னும் இதய அதிர்ச்சிக்கு முதல் நாள்
அருள்நெறி செல்வம் அவர்களோடு அவர் இல்லத்திற்கு சென்றிருந்தேன்
வாய்மையின் வாட்டம் கண்டு மனம் நெகிழ்ந்தேன்
நோய்மையில் மெலிந்த தமிழ் வாருங்கள் என்று மெல்ல முனகியது
பேசிக் கொண்டிருந்தோம் நிறையவே பேசினோம்
இடைஇடையே திருக்குறளும் திருமந்திரமும் அவர் பேச்சிற்கு வலுச்சேர்த்தது மறதியை தவிர அவர் எதையும் இன்னும் மறந்துவிடவில்லை
என்பதை என்னால் உணரமுடிந்தது.
அருகே அன்னை சுபத்திரா அவர் பிள்ளைகள் வாசுகி தேவகி
வாசுகியிடம் நூல் ஒன்றை எடுத்துவா என்கிறார்.
எந்தப் புத்தகம் என்று வாசுகி வினவ
கலைஞரின் சங்கத்தமிழ் என்கிறார்

வேகமாகச் சென்று அந்தநூலை எடுத்துவருகிறார் மகள் வாசுகி
சங்கத் தமிழின் முன்பக்கத்தில் எழுதுகிறார்
அன்பே இன்பத் தமிழ். வாழ்க தமிழ் மொழி!! வாழ்க தமிழ்மொழி!!
அதன்கீழே ஆறுமுகம் சோமசுந்தரம் என் இதயத்தைப்போல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களும் கலங்கி கரைந்தன. இந்த வாசகங்களோடுதான்
அவர் எழுதுகோல் கடைசியாக எழுதி ஓய்ந்தது
சாவின் கடைசிக் கணத்திலும்
அவர் சங்கத் தமிழ்நூலையே தேடினார்
அன்பே இன்பத் தமிழ் என்று தமிழ்காலால் வாடினார்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவம் என்கிறார் திருமூலர்

அன்பும் தமிழும் இரண்டல்ல
அன்பே இன்பத் தமிழ் என்கிறார் எங்கள் வானலை வசிட்டர்

"அன்பே இன்பத் தமிழ் அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடல்" என்று சொல்லத் தவறியது
வள்ளுவத்தின்
வறுமை என்று திருவாய் மொழிந்திருக்கிறார்.

வானலையில் அவர்போட்ட கோலங்கள்
எழுதாத இலக்கியங்களாகின
காற்றுக்கு மட்டும் கற்றுக் கொள்ளும் சக்தி இருந்தால்
பஞ்ச பூதங்களில் காற்றே வணக்கத்திற்குரியதாகும்

சோமசுந்தர சொற்சரத்தில் புனைந்த பூக்களை எல்லாம்
ஒவ்வொன்றாய் தொட்டு மோந்து பார்க்கிறேன்
இவரை ஞானி என்பதா? யோகி என்பதா? துறவி என்பதா?
தமிழ்த் தேனீ என்பதா? இவையாவுமாய் நின்ற வித்தக விருட்சத்தை
இழந்து விட்டோம்.
மேலைக் கடலுக்குள் போய் ஒழியும் சூரியனுக்கு புரிவதில்லையே
பூக்களின் வாட்டம்
அவர் உயிர் விலை என்னவென்று எமனுக்கும் புரியவில்லை
தடுத்தாட் கொள்வதற்கோ கடவுளுக்கும் நேரமில்லை
என் இதயச் சுவரெல்லாம் ஆறுமுகத்தை கோடிமுறை வரைந்து
வைத்து வணங்குகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலா சந்திரன்
வானலை மன்றத் தலைவி

# அமர தீபம்

வானலையின் மூல மதாய் முதன்முதல்
வாசனையை வீசி வந்து வசீகரித்த
வண்ணத் தமிழ் அமுதே நெடுமுனியே
ஆறுமுகம் பெற்ற சோமசுந்தர செம்மலே

வள்ளுவம் யார்த்த வாழ்க்கை வாழ்ந்தவனே
வாலறிவுக் கதிரோனே CTBC யின் செம்மொழியாளனே
சீர் தூக்கி நின்ற தூணே தூயவனே
வாழ்நாள் சாதனையாளன் விருதினைப் பெற்ற வித்தகனே

நல்அறம் நாட்டி நன்மக்கள் தனைப்பெற்று
நற்கல்வி ஊட்டி உத்தம புத்திரராய்
பார் போற்ற உயர்த்தியே வைத்தாய்
நற்பண்பு நிறை பாசமுள்ள பிள்ளைகளை

அன்னவர்கள் ஐவரையும் ஆளாக்கி விட்டதன்றி
தன்னவள் சுபத்திரா தேவியின் காந்த சொரூபனாய்
கண்ணை இமைபோலக் கவிந்து காத்து நின்று
இல்லறமாம் தேரதனை இனிதாகத்தான் செலுத்தினாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்க்கு அன்பனாய் அவரவர் இன்னலின்
பங்களிப் பேற்றுமே பசுமையாய் வாழ்ந்தனை
துன்பத்தின் எல்லையில் துயரெமைத் தாக்கிடினும்
இன்பத்துச் சிரிப்பதால் என்றும் தாலாட்டிடுவீர்

என்னடா உந்தன் இடரெனக் கேட்டுமே
புண்படா மல்லொரு மார்க்கமே புகலுவீர்
கண்படா மல்லொரு காரியம் செய்திடின்
துன்பத்துள் துவன்றிடுவீர் சுடுசொல்நீர் அறிகிலீர்

எப்பொருள் எவரின்வாய் எப்படிச் சொல்லினும்
அப்பொருள் விளக்கத்தை அளந்துமே கூறிடுவாய்
மெய்ப்பொரு ளறிந்துமே வீண்வம்பு தான் ஏனென்று
தப்பேதும் செய்திடாத்தலைவா நீ எங்குற்றாய்?

இடரென்று யார்வந்து என்னதான் கூறினும்
உடனதைக் களைந்து இன்னலைத் தீர்ப்பீரே
கடனென மட்டும் கருதி நீர் காத்தீரோ
விருந்தோம்பி என்றும் மகிழ்ந்த கதை யாமறிவோம்

சோமரே உந்தன் சுந்தர வாய்மொழி எங்கே?
நயகரா வீழ்ச்சியின் சாரல் தான் எங்கே?
நோய் வந்து கொய்ததோ கோமானே!
உந்தன் கோல உடல் சென்றாலும் கோலம் மறவாது

கோல் செய்யும் உந்தன் ஆத்மா என்றும்
ஆறுதல் சொல்லித் தேற்றி நிற்கும்
நேச அலையாய் ஒளி தருவாய் ஒளிச்சுடரே
வாழ்வாங்கு வாழ்ந்தவனே வானத்தில் உறைபவனே

உன் நினைவுகள் நிதம் நிலைத்து எம்முடன் வாழும்
இன் சொல் அரசே இலக்கு தனை எய்திவிட்ட பெருமை
இவையுடனே நீ பெறுவாய் ஆத்ம சாந்தி
சாந்தி!! சாந்தி!! சாந்தி!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸாயிப்பிரியன்

# இல்லற ஞானி

தனக்கு வெளியேயுள்ள புற உலகை அறிய முயற்சிக்கும் மனிதன் தனக்கு உள்ளேயுள்ள அக உலகைப்பற்றிச் சிறிதும் சிந்திக்கத் தவறுகின்றான்.

மனிதன் அனுபவிப்பதற்காகவா பிறந்தான்? தன்னை அறிவதற்காகவன்றோ பிறந்தான். தன்னை அறிந்தவன் அல்லவா உண்மையான உயர்ந்த சுகத்தை அறிந்தவன் ஆவான். அதுவே ஆத்ம சுகம். இருப்பதை யாவர்க்கும் அன்புடன் கொடு. அக்கொடை உனக்கே கொடுப்பதாக என்று நீ உணரத் தொடங்குகின்றாயோ - அன்றே
'சுகம்' உன்மடியில்.

உடலை மறப்பது தூக்கம். உடலைப்பிரிவது மரணம். இதை நன்றாக இறுதிவரை உணர்ந்தவர் என் நண்பர் அமரர் திரு. ஆறுமுகம் சோமசுந்தரம். மரணத்தின் ரணத்தையும்கூட மணமாக்கிய மனிதன்.

மரணப் படுக்கையிலும் தன் இனிய பேச்சால், புனித செயலால், கனிவான பார்வையால் மணமூட்டியவர். மரணப் பிடியை - இன்னொரு தாயின் மடியாக ஏற்றுக்கொண்டு, புன்னகை பூத்து, பொன்னுலகு புகுந்த புன்முறுவல் செம்மல். மரணம் அவர் முன் மண்டியிட்டது.

அழைப்புகள் விடுத்து விழாக்கள் காணுதல், வளைத்துக் குழைந்து வார்த்தைகளினால் தழுவுதல், பழகிப் பிடித்துக் கூட்டம் கூட்டுதல் விருதுகள் கொடுத்து விருந்தில் இணைதல், பார்த்தும் கேட்டும படித்தும் மனமும் வேர்த்தது.

இவருக்கும் விருது விழா ஒன்று இருந்தது.

விருது விழாவில் விருது ஒன்றே உண்டு. விருதிற்கே விழா என்றால் - விருதுகளுக்கே மகிழ்ச்சியன்றோ! விருது கொடுத்துப் பீடம் ஏற்ற எண்ணினோம். அவர் எம் இதய பீடத்தையல்லவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பாக ஏற்றுக் கொண்டார்.

1956 வைகாசியில் என் இதயம் திறந்தேன். 2005 கார்த்திகையில் என் இதயத்துள் மூடிக் கொண்டேன். நட்பின் பொன்விழாக் காணுமுன் விண்ணுலகு விருதளிக்க விரைந்தது.

ஆலுக்கேன் விழுதுகள்! அமரர் ஆறுமுகம் சோமசுந்தரம் அவர்கட்கு ஏன் விருதுகள்? விருதால் உருவான வித்தகர் - அவர். அவரே - இறைவன் எமக்குத் தந்த விருது. அவரைப் பெருமைப் படுத்துவதாக எண்ணி - எம்மை நாமே பெருமைப்படுத்தும் நிகழ்வு.

மனிதநேயம் மிகுந்தவர். பிறரின் துன்பத்தைத் தன்துன்பமாகக் கருதி உடுக்கை இழந்தவன் கைபோல், இடுக்கண் களைந்த அறிவுடையோர். தமிழையே உயிராய்த் தாங்கியவர். தமிழே - அவரைத் தன் உடலாய்த் தாங்கியது.

சுகத்தைத் தேடி அலையாத சுகசீவி. சுகமாக வாழ்ந்த ஞானி - சுகர் அவர். கம்பரின் சனகர் கூடப் பேசாது - சுகம் கண்டவர். இவரோ பேசிப்பேசி, பேச்சால் பெரும் சுகத்தைப் பிறருக்கும் கொடுத்து - தானும் சுகத்தில் வாழ்ந்தவர். சுகமே - அவர் சுகத்தில் இருப்பிடம் தேடியது.

இல்லறத்தை நல்லறமாகக் கண்டவர். துறவறத்தை பற்று அறுக்கும் ஒரு தொல் அறமாகக் கண்டு, உணர்ந்து காட்டிற்கு ஏகாது - வீட்டில் இல்லறத்தில் இருந்தவாறே, துறவறம் பூண்ட தூயவர் அல்லல் உலகில் ஆனந்தம் கண்டவர். நல்கர் மங்கள் ஆற்றி தொல்கர்மங்கள் பேணிப் பல்லோரும் போற்றப் பெருமையுடன் வாழ்ந்து, இன்ப துன்பங்களை இருவித சுவைகளாகக் கொண்டு பற்றுக்குள் இருந்து, பற்றற்று வாழ்ந்து பூரணத்துவம் பெற்ற ஓர் இல்லற ஞானி. அவரை நண்பராகப் பெற்றதில் எனக்குப் பெருமை. எம் நட்பில் அன்பைத் தவிர வேறு எதுவித எதிர்பார்ப்புகளும் இருந்ததில்லை.

சனகர் வாழ்வை உண்மைப்படுத்தப் பிறந்த ஓர் உன்னத ஞானி இல்லற ஞானி. அவர் நினைவு-நெஞ்சக்கன கல்லையும் நெகிழ்த்தும்.

ஓம் ஸ்ரீ சாயி ராம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஞ்சாலன் எஸ். ஜெகதீசன்

# நீத்தார் நினைவில்....

வானலையில் வாழ்வாங்கு வாழ்ந்தார்
வையத்துளுறைவார்
கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் வாழ்நாள் சாதனையாளர் விருதை அவருக்கு வழங்கிக் கௌரவித்தது.
அதில் அவரது மரணம்கூட உயிர்பெற்றது!
முதியோர் அரங்கத்தில் மூத்தவர்.
மூத்தவருக்குரிய பண்பும் பக்குவமும் நிறைந்தவர்.
தமது இதயத்தால் எம்மீது அன்பைச் சொரிந்தவர்.
நல்லவர் வல்லவர்.
நல்லவரென்பதால் அவரை யாரும் துன்புறுத்தவும் முடியாது.
வல்லவரென்பதால் அவர் யாரையும் துன்புறுத்தியதும் கிடையாது.
பெரியோர் - சிறியோர் - கற்றோர் - மற்றோர் - என்ற பாகுபாடின்றி சகலருடனும் இனிதே பழகியவர்.
அவரிடம் நேர்மை இருந்தது.
அவரிடம் வாய்மை இருந்தது.
உலகின் முதலாவது இருபத்திநான்கு மணிநேரத் தமிழ் வானொலியாக கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் 1995ல் உதயமாகியது.
அப்பொழுதிருந்தே அவரது புகழும் உயர ஆரம்பித்தது. ஏராளமான நிகழ்ச்சிகளில் அவர் தோன்றினார். ஒவ்வொன்றிலும் தனது ஆற்றலை ஆழ ஊன்றினார். நல்ல மனைவி, நல்லபிள்ளைகள், நல்ல மருமக்கள், நல்லபேரர்கள், நல்ல நண்பர்கள், என எல்லாமே அவரது வாழ்க்கைக்கு இறைவன் கொடுத்த வரம்.
பத்துவருட வானலை வாழ்க்கையில் தன் பேரை அவர் கெடுத்துக் கொண்டதுமில்லை. பிற பேரை கெடுத்துக் கொள்ளவுமில்லை.
அவரிடம் இருந்தது குரல் வளம்.
கூடவே திகழ்ந்தது விரல் வளம்.
மூன்று நிமிட நேரத்தில் பிடித்தவர்களின் பெயர்களைச் சொல்லுமாறு அவரிடம் யாராவது கேட்டிருந்தால், ஒரு பெரிய பட்டியலையே மூச்சுவிடாது சொல்லியிருப்பார்.
அதே மூன்று நிமிட நேரத்தில் பிடியாதவர்களின் பெயர்களைச் சொல்லுமாறு அவரிடம் யாராவது கோரியிருந்தால் ஒருவர் பெயரைக்கூடக் குறிப்பிடத் தோன்றாமல்த் திணறிப் பெருமூச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டிருப்பார்.

இருந்து கொண்டிருக்கும் பொழுதே இறந்து கொண்டிருக்கும் நட்புகள் உள்ள இக்காலத்தில் அவரது நட்பு உயிரோட்டமானது. 1944ல் இருந்து டாக்டர் பரராஜசிங்கத்துடனும், 1956ல் இருந்து ஸாயிப்பிரியன் துளசிகாமணியுடனும், 1960ல் இருந்து பிரம்டன் சின்னத்தம்பியுடனும் தோன்றிய மென்மையான நட்பு இறுதிவரை நீடித்து மேன்மையான நட்பு என்றாகி நட்புக்கு உதாரணமாகியது. எல்லோரையும் நல்லோராகக் கண்டவர் அவர்.

வானலையில் தெரிந்தவர்கள் யாராவது தமது திறமையை வெளிப்படுத்தியிருந்தால் உடனடியாகவே தொலைபேசியில் பாராட்டுவார்.

தெரியாதவர்கள் தமது ஆற்றலைக் காண்பித்திருந்தால் தெரிந்தவர்களிடம் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுப் போற்றுவார்.

நிறையும் குறையும் பகுதி அவரால் நிறையக்கண்டது. சத்திரசிசிச்சை முடிந்தபின்னர் ஆஸ்பத்திரியில் ஆறுதலாக அவர் படுத்திருந்த சமயத்திலொருநாள், சீனாவிலிருந்து இளையபாரதி தொடர்புகொண்டு அக்கறையுடன் சுகம் விசாரித்திருந்தார்.

எந்த மருந்தும் செய்யாத வித்தையைஅந்த மதுரக்குரல் செய்தது. தீராத நோயர் ஒரு கணத்துக்குள் மீண்டும் புத்துயிர் ஜெற்ற தீவிர நேயரானார்!

அன்று பூராவும் தன்னுடன் தொடர்புகொண்ட அனைவரிடமும் திரும்பவும் திரும்பவும் பெருமகிழ்வுடனும் மிகவும் பெருமிதத்துடனும் இதனையே குறிப்பிட்டார்.

அவரது அந்தக் குதூகலத்தில் சிலநாட்கள் குழம்பிப்போனது அவரைப் பீடித்த அந்த நோய்.

இருதடவைகள் வானலையில் அவர் இளையபாரதியை கண்ணீர் உகுத்திடவும் வைத்தார்.

முதல்முறை அந்திப் பூக்களின் பின்பு.

அதில் இளையபாரதியின் கண்ணீருடன் நேயர்கள் சேர்ந்தனர்.

இரண்டாவது முறை அவரது இறுதிமூச்சின் பின்பு.

அதில் இளையபாரதியின் கண்ணீருடன் நேயர்கள் சோர்ந்தனர்.

அவர்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொழுது பார்வையிடச் சென்றிருந்த நான் கவிநாயகர் கந்தவனத்தின் வரிக்கவிதைகள் நூலையும் கவிநாயகி குறமகளின் மாலை சூட்டும் நாள் நூலையும் என்னுடன் எடுத்துச் சென்றிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டிலும் எனது மதிப்புரையும் இருந்தது.
இயலாத நிலையிலும் அவற்றை வாசித்து என்னைப் பாராட்டினார்.
இதுவரையில் எத்தனையோ தடவைகள் அதனை எனது இதயம் ரகஸியமாக மீள் ஒலிபரப்புச் செய்து மகிழ்ந்து விட்டது.
தமிழீழ இலக்கியத்தில் குறமகள் இருக்கின்றார்.
குறமகளின் இலக்கியத்தில் தமிழீழம் இருக்கின்றது என்ற எனது எழுத்துக்களை குறமகளின் நூலிலிருந்தும், பல வரிகள் சிறப்பானவை! சில வரிகள் சிவப்பானவை! என்ற எனது எழுத்துக்களை கந்தவனததின் நூலிலிருந்தும் எடுத்து அன்று அவர் மிகவும் சிலாகித்ததில் எனது இதயத்துடிப்பு எக்கச்சக்கமாய் எகிறியது.
ஆரோக்கியமாக அவர் இருந்திருந்தால் ஆரோக்கியமான விமர்சனத்தை அவ்விரு நூல்களைப் பற்றியும் செய்திருப்பாரே என்று நான் வருத்தப்பட்டேன்.
சுமார் கடந்த இரண்டு வருடங்களாக தினமும் என்னுடன் ஒரு சில நிமிடங்களாவது உரையாடிய பெரியவர் அவர்.
அவர் எனக்குச் சூட்டிய தங்கப்பதக்கம் இன்னும் என்னை அலங்கரிக்கின்றது.
அது அவரது பொன்விழாவிற்கான எனது உழைப்புக்காக எனின் எனது உழைப்பைப் போலவே அந்தப் பதக்கமும் மிகவும் சிறியது.அது பொன்னான அந்த மனதின் மகிழ்ச்சித் திளைப்பினால் எனின் அவரது மனதைப் போலவே அந்தப் பதக்கமும் மிகவும் மிகவும் பெரியது.
இனியவர் இடத்தில்.... இனி எவர்?
ஆலோசனைகளுடன் அவர் மகள் வாசுகி வானலையில் வருவாரா?
ஆர்வமுடன் அவர் பேரன் தர்ஷன் காற்றலையில் கலப்பாரா?
இது வானொலி வாரிசுகளாக அவர் வாழ்வில் விரும்பியது.
வானலையில் ஆறுமுகம் சோமசுந்தரம் என்பது என்றுமே இறவாத காலம்! மெய்யுருகி அவர் மருமகன் விஜயகுமார் பஞ்சபுராணம் பாடிக்கொண்டிருக்கும் பொழுதே பூரணமாய் மெய்மறந்தார் - பூர்வ கிரியைகளை பூர்த்தி செய்து மெய்துறந்தார்.
எவர்க்கும் உவமை இல்லாத உத்தமர்.
தனக்கு உவமையில்லாதவன் தாள் சேர்ந்தார்.
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்.
வானுறைவார்
பெரியார் வாழ்க்கை நிறைவானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய நன்றிகள்

உயிர் உள்ளவரை உள்ளத்தால்
நேசித்தவர்களுக்கும் உயிர் பிரிந்தபொழுது
ஆறுதல் கூறிய - ஆறுதல் அளிதத உற்றார்,
உறவினர் நண்பர்கள் அனைவர்க்கும்,
இறுதிக்கிரியைகளில் கலந்து
கொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்தி
அளித்தவர்களுக்கும், அஞ்சலி
செலுத்தியோர்க்கும், மலர்வளையங்களுக்கும்
விசேஷமாக கனடிய தமிழ் ஒலிபரப்புக்
கூட்டுஸ்தாபனம் வழங்கிய வாழ்நாள்
சாதனையாளர் விருதுக்கும் நேயநெஞ்சங்கள்
அனைத்துக்கும் கவிதாஞ்சலிக்கும், முதியோர்
அரங்கத்தின் இதயாஞ்சலிக்கும் அந்தியேட்டிக்
கிரியைகளில் கலந்து எம்முடன் ஒருமித்துப்
போனோர்களுக்கும்

எமது -
உணர்வுடன்,
உறவுடன்,
உயிருடன்,
கலந்துவிட்ட இதய நன்றிகள்!

மனைவி
மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
10-12-2005

5-27 FOUR WINDS DRIVE
NORTH YORK
ON. M1J 1K7
416-663-2748
905-294-7370





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அது நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காய் நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org